# எழுத்து

இலக்கிய காலாண்டு ஏடு

ஆசிரியர்:

சி. சு. செல்லப்பா

பத்தாம் ஆண்டு  அக்டோபர்—டிசம்பர் 1968  ஏடு 114

## நீ இன்று இருந்தால்

—புதுக்கவிதை குறுங்காவியம்

## வாழ்க்கையின் அழைப்பு

—நட் ஹாம்ஸன்

## நாவலில் பாத்திரப் பேச்சு

—எழில்முதல்வன்

ரூ. 1·50

# எழுத்து

ஆசிரியர்:

சி. சு. செல்லப்பா

காலாண்டு ஏடு

அக்டோபர்—டிசம்பர் 1968

| | | |
|---|---|---|
| 1959—1968 | 2 | தலையங்கம் |
| வாழ்க்கையின் அழைப்பு | 3 | நட்ஹாம்ஸன் |
| நாவலில் பாத்திரப் பேச்சு | 6 | எழில்முதல்வன் |
| நீ இன்று இருந்தால் | 9 | சி. சு. செல்லப்பா |
| புத்தகங்கள் (பாரீசுக்குப் போ) | 28 | சி. கனகசபாபதி |
| கனியாளுள் | 31 | எஸ். கிருஷ்ணமூர்த்தி |
| தலைவியே | 31 | துரை. சீனிசாமி |
| கிளி | 31 | ம. ந. ராமசாமி |
| படைப்பு | 31 | ந. ஜோதிராமலிங்கம் |
| கண்ணீர் | 31 | பூ. மாணிக்கவாசகம் |
| நரை | 31 | வ. பா. சடகோபன் |
| இந்த ஏட்டில் | 32 | ........ |

எழுத்து—பத்தாம் ஆண்டு—அக்டோபர்—டிசம்பர்—ஏடு 114

காலாண்டு தோறும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களில் வெளிவரும்.

ஆபீஸ்: 19-A, பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

ஆண்டு சந்தா ரூ. 5-00; மூன்று ஆண்டுகள் ரூ. 15-00

வெளி நாடுகளுக்கு ரூ. 10-00; ,, 25-00

வெளியூர் செக்குகளுக்கு 50 பைசா 'கிளியரன்ஸ்' கட்டணம் சேர்த்து அனுப்பவேண்டும்.

கதை, கட்டுரை, கவிதைகளுடன் போதிய ஸ்டாம்பு வைக்க வேண்டும்.

மதிப்புரைக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்.

# 1959 - 68

இந்த ஏட்டோடு எழுத்துக்கு பத்து வயது நிரம்புகிறது. அதாவது இங்கிலீஷில் :டிகேட் என் கிறேமே—பத்து ஆண்டுகள், என்று குறிப்பிடும்படியான காலஅளவை எட்டிவிட்டது. ஒரு சின்னப் பத்திரிகை. விமர்சனம், புதுக் கவிதை, இரண்டில் மட்டும் முதன்மையான அக்கறை காட்டி வந்திருக்கும் ஒரு இலக்கிய ஏடு பத்து ஆண்டுகள் வந்து விட்டது என்றல் நம்புவது சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனல் இது நடப்பு, தமிழ் இலக்கியப் பத்திரிகைத் துறையில் இதுவரை காணுத ஒன்று. இந்த சாதனையுடன் அடுத்த ஏடுமுதல் பதினேருவது ஆண்டுக்குள் நுழைந்து அடுத்தகால அளவான மாமாங்க காலத்தை நோக்கி முன்னேற இருக்கிறது.

ஆனல் வெறுமனே கால அளவை மட்டும் கொண்டு எழுத்துவின் சாதனையை பெரிசுப் படுத்திப் பேசுவதும் சரியாகாது. எழுத்து தன் வயதுக்கேற்ற ஆளுமையை சாதனையாகப் பெறக்கூடுமானுல்தான் அதன் வாழ்வு நாட்கள் முக்கியமானதாகும். குறிப்பிடத்தக்கதாகும். எழுத்துக்கு ஆளுமை என்று எந்த அர்த்தத்தில் கூறுவது, கணிப்பது ?. முதலில் அதுக்கு ஒரு தனித்தன்மை இருக்க வேண்டும். மற்றவைகளிலிருந்து மாறுபட்டு ஒலிக்கும் ஒரு தொனி இருக்க வேண்டும். அந்தத் தொனியும் எடுப்பானதாக இருக்க வேண்டும். அதோடு திட்ட வட்டமான நிச்சயமான முக்கியத்வம் வாய்ந்த, பொருட்படுத்தத்தக்க பொருள் கொண்டதாக இருக்க வேண்டும். அதோடு முத்திரை இட்ட குணம் கொண்டதாக இருக்கவேண்டும். இவை எல்லாம் சேர்ந்துதான் ஒன்றை தனித்து தூக்கிக்காட்டும்

இந்த குணங்களை வைத்து எழுத்துவின் பத்தாண்டுகால 114 ஏடுகளை மொத்தமாக பார்த்ததில் தெரியவருவது என்ன ? எழுத்துவில் இதுவரை வெளியாகி இருக்கும் ஏறக்குறைய 500 கட்டுரைகளும், 700 கவிதைகளும் மற்றும் சிறுகதைகள், மதிப்புரைகளும் இதர அம்சங்களும் பொருட்படுத்தத் தக்கனவா? விமர்சனத் துறையிலும், கவிதைத் துறையிலும் ஒரு திருப்பம் விளைவித்திருக்கிறதா ? வளர்ச்சி, முன்னேற்றம் தெரிகிறதா? இவைகளில் வெளியான கருத்துக்களின் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா? இவைகளில் தொனித்த படைப்பு அனுபவம் மதிப்புள்ளதாக தற்காலத்ததாக இருந்திருக்கிறதா ? இதுமாதிரி எல்லாம் இன்னும் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டு பதில் கிடைக்கிறதா, எந்த மாதிரியான பதில் என்று பார்க்க வேண்டும். இந்த சிறிய தலையங்கத்தில் நாம் கேள்விகளைத்தான் எழுப்பி யிருக்கிறேம். பதிலை நாம் சொல்வதைவிட எழுத்துவோடு ஆரம்ப முதல் தொடர்புகொண்ட வாசகர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறேம். தங்கள் கருத்தையும் தெரியப்படுத்தும்படியும் கேட்டுக்கொள்கிறேம்.

ஆனல் இதை மட்டும் நாம் சொல்ல முடியும். விமர்சனம், புதுக்கவிதை துறைகளில் 1958க்கு முன் அதாவது எழுத்து வருமுன் இருந்த சூழ்நிலையையும் சாதனையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எழுத்துவின் பாதிப்பு நன்ருக தெரிகிறது. புதிதாக வெளிவரும் பத்திரிகைகளில் வரும் விமர்சனக் கட்டுரைகளும், சென்னையிலும் மற்ற இடங்களிலும் உள்ள வாசகர் சங்கங்கள் நடத்தும் கூட்டங்களில் பேசி, எழுதி வெளியாகும் பேச்சு கட்டுரை கருத்துக்களும் எழுத்துவின் பாதிப்பை நிரூபிப்பவை. ஒரு அன்பர் 'மணிக்கொடி காலச் கட்டத்துக்குப்பின் எழுத்துதான் காலகட்டமாக அமைவது' என்று குறிப்பிட்டதுபோல், எழுத்துவின் சாதனை ஆகும். இதில் நமக்கு கொஞ்சம் திருப்தி.

கொஞ்சம் என்றதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். எழுத்துக்கு ஆதர்சமாயும் அதன் முதல் ஏடு முதல் படைப்புத் தொடர்பு கொண்டும், புதுக்கவிதைத் துறையில் எழுத்துவில் வளம்பெருக மூல காரணமாயும் இருந்து வரும் பிச்சமூர்த்தியும் எழுத்துவின் பத்தாண்டு போக்கு, சாதனைபற்றி கொஞ்சம்தான் திருப்தி தெரிவிக்கிருர். 'தீபம்' பேட்டியில் 'எழுத்து இலக்கிய வட்டம் போன்ற பத்திரிகைகள் இத் துறையில் (விமர்சனத் துறையில்) செய்துள்ள முயற்சி போதாது' என்று கூறி இருக்கிருர் அவர் அபிப்ராயத்தை நாம் மதிப்போடு ஏற்றுக் கொள்கிறேம். விமர்சனம் சம்பந்தமாக இந்த பத்தாண்டுக் காலத்தில் ஒரு ஆரம்பம் செய்திருக்கிறது எழுத்து நல்ல ஆரம்பமாக இருக்கிறது என்று தான் கருதுகிறேம்.

புதுக்கவிதை சம்பந்தமாக ஒரு வார்த்தை. இந்த பத்தாண்டு காலத்தில் வளம் பெருகி, மற்ற பத்திரிகைகள் சிலவும் அதை வரவேற்றுப் போடும் ஒரு சூழ்நிலை ஏற்பட எழுத்து சாதித்திருக்கிறது. சிறந்த கவிதைகள் பல தமிழில் பிறந்திருப்பது தமிழ் கவிதைக்கு இன்னும் நல்ல எதிர்காலம் இருப்பதுக்கு அறிகுறியாகும்.

கடைசியாக-வெளிநாடுகளில் வெளியாகும் சிறந்த இலக்கிய ஏடுபோல் எழுத்து ஆக வேண்டும் என்பதே லட்சியம். வரும் ஆண்டில் அதுக்கான செயல் முறையை கையாள உத்தேசம். வாசகர்கள் தங்கள் சந்தா ஆதரவை தொடர்ந்து தருவதுடன் அதிகப்படுத்தியும் தரும்படி கேட்டு கொள்கிறேம். இது சம்பந்தமாக ஒரு முயற்சியாக இந்த ஏட்டின் பின் அட்டையில் காணப்படும் வேண்டுகோள் அறிவிப்பை வாசகர்கள் கவனித்து நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேம்.

*சிறுகதை*

# வாழ்க்கையின் அழைப்பு

**நட்ஹாம்சன்**

கோபன் ஹேகனில் இருக்கும் உள் துறைமுகத்தின் அருகே வெஸ்டர் வோல்ட் என்ற ஒரு தெரு இருக்கிறது அண்மையில் கட்டப்பட்ட மக்கள் நடமாட்டம் இல்லாத புதிய பாலம் இருக்கிறது. அங்கே சில வீடுகள் இருப்பதைக் காணலாம். காஸ் விளக்குகள் இருக்கின்றன. அனேகமாக அங்கே ஒருவர் கூட இல்லை எனலாம். இப்போது கூட, இந்த கோடை காலத்தில் அங்கே மக்கள் உலாவுவதை மிக அபூர்வமாகத்தான் பார்க்கலாம்.

நேற்று மாலை அந்த தெருவில் ஆச்சரியப் படும்படியான ஓர் அனுபவம் எனக்கு ஏற்பட்டது

நான் அந்த தெருவின் நடைபாதையில் அப்படியும் இப்படியுமாக நடந்து கொண்டிருக்கும்போது என்னை நோக்கி ஒருத்தி எதிர்ப் புறத்திலிருந்து வந்தாள். அங்கே பார்வை செல்லும் தூரம் வரை ஒருவர் கூட கண்ணில் தென்படவில்லை. காஸ் விளக்குகள் ஏற்றப்பட்டன, விளக்குகள் எரிந்தாலும் அங்கே இருள் இருந்தது. அவளின் முகத்தை தெளிவாக நான் பார்க்க முடியாதபடி அவ்வளவு இருட்டு இருந்தது. ஏதோ வழக்கமான இரவுக்கால பிராணிகளில் ஒன்றுபோல் இதுவும் ஒன்று என எண்ணிக்கொண்டு நான் அவளை கடந்து சென்றேன்.

அந்த பாலத்தின் முடிவில் நான் திரும்பி மறுபடியும் வந்த வழியே நடந்தேன். அவள் கூட திரும்பிப் பார்த்தாள்; அவளை நான் மறுபடியும் பார்த்தேன். நான் எண்ணிக் கொண்டேன்: அவள் யாருக்கோ காத்துக் கொண்டிருக்கிறாள் என்ற ஆவலில் உந்தப்பட்டவனாய் பார்த்தேன். மீண்டும் மற்றொரு தடவை அவளைக் கடந்து சென்றேன்.

மூன்றாவது தடவையாக நான் அவளை சந்தித்தபோது என் தொப்பியை தலையிலிருந்து எடுத்து அவளிடம் பேசினேன்.

"வணக்கம். யாருக்காவது காத்துக் கொண்டிருக்கிறீர்களா?" அவள் ஆச்சரியப்பட்டுப் போனாள். இல்லை—அதாவது ஆமாம் என்ற பொருள் படும்படி — சொன்னாள். அவள் யாருக்கோ காத்துக்கொண்டிருந்தாள்.

யாருக்காக காத்துக் கொண்டிருக்கிறாளோ அந்த நபர் வரும் வரை அவளுடன் நான் இருப்பதை அவள் எதிர்க்கிறாளா?

இல்லை. அவள் கொஞ்சம்கூட மறுக்கவில்லை. அவள் எனக்கு நன்றி தெரிவித்தாள். தான் யாருக்காகவும் காத்திருக்கவில்லை என என்னிடம் விளக்கிச்சொன்னாள். அவள் அங்கு காற்று வாங்க வந்தாள். அவ்வளவுதான். அங்கே காற்று அவ்வளவு அமைதியாய் இருந்தது.

நாங்கள் இருவரும் அப்படியும் இப்படியுமாக நடந்தோம். முக்கியம் இல்லாத பல விஷயங்களைப்பற்றி நாங்கள் பேசினோம் நான் கை நீட்டினேன்.

"வேண்டாம் நன்றி" என அவள் தலை அசைத்தாள். இப்படியாக உலவுவதில் ஒரு வித இன்பம் எதுவுமில்லை. அந்த இருட்டில் அவளை என்னால் பார்க்க முடியவில்லை. ஒரு நெருப்புக்குச்சி கிழித்து என் கைக்கடிகாரத்தருகே கொண்டு சென்று மணி என்ன வென்று பார்த்தேன். அந்த எரியும் குச்சியை மேலுயர்த்தி அவளையும் நோக்கினேன்.

"ஒன்பதரை" நான் சொன்னேன்,

தான் பனிபோல் உறைந்து விட்டதுபோல் அவள் நடுங்கினாள். இந்த வாய்ப்பை நான் பிடித்துக் கொண்டேன்.

"நீ குளிரால் உறைந்து போகிறாயா என்ன? எங்கேயாவது மது அருந்துவோமா? திவோலிலா? நேஷனிலா?" எனக்கேட்டேன்.

"இங்கே பாருங்கள். இப்போது என்னால் எங்குமே போக முடியாது" என விடையளித்தாள்.

பின்பு, அவள் ஒரு நீண்ட கரியமுகத்திரை அணிந்திருப்பதை முதன் முதலாக கண்டறிந்தேன். என் தவறுதலுக்காக அந்த இருட்டை நிந்தித்து அவளிடம் மன்னிப்பு கேட்டேன். அவள் நான் கெஞ்சிக் கேட்ட மன்னிப்பை உடனேயே ஏற்றுக்கொண்ட விதத்தைப் பார்த்தபோது, வழக்கமாக இரவில் திரிகிறவள்களில் இவளும் ஒருத்தி அல்ல என்பதை தெளிவாய் உணர்ந்தேன்.

"என் கையைப் பிடித்துக் கொள்ளேன். கொஞ்சம் வெதுவெதுப்பாகும்" என மறுபடியும் கேட்டுக் கொண்டேன்.

என் கையை அவள் பிடித்துக்கொண்டாள்.

நாங்கள் கீழும் மேலுமாகச் சென்றோம். என்னை, கைக்கெடிகாரத்தைப் பார்க்கச் சொன்னாள்.

"மணி பத்து. நீ எங்கே இருக்கிறாய்?" எனக் கேட்டேன்.

" கமால் கோன் கேவிய் "

அவளை நான் நிறுத்தினேன்.

" உன் வீடுவரைக்கும் உன்னைக் கொண்டு வந்து விடட்டுமா ?" எனக் கேட்டேன்.

" அப்படி ஒன்றும் வேண்டியதில்லை. உனக்கு அவ்வளவு தொந்தரவு கொடுக்கமாட்டேன். நீ பிரட்கேடில் தானே இருக்கிறாய் ? இல்லையா ?" அவள் பதில் சொன்னாள்.

" அது எப்படி உனக்குத் தெரியும் " வியப்புடைந்தவனாய் கேட்டேன்.

" ஓ, நீ அங்கு இருக்கிறாய் என்பது எனக்கு தெரியுமே " என பதில் சொன்னாள்.

சிறிது நேரம் மௌனம். விளக்கு ஏற்றப்பட்ட தெருக்களில் நாங்கள் இருவரும் கை கோர்த்துக்கொண்டு நடந்தோம். அவள், தான் அணிந்து கொண்டிருக்கும் முகத்திரை பின்னால் தொங்கிக்கொண்டு வர அவள் வேகமாக நடந்தாள்.

" நாம் சீக்கிரமாகப் போவோம் " அவள் சொன்னாள்.

கமால்கோன் கேவியில் உள்ள அவள் வீட்டிற்கு வந்தடைந்தபோது வாயிற்கதவு அருகே நின்று என்னை நோக்கி திரும்பிப் பார்த்தாள். அந்தப்பார்வை, நான் அவளுக்கு இரக்கத்தினால் துணையாக வந்ததற்கு நன்றி தெரிவிப்பது போல் இருந்தது. அவளுக்காக கதவைத் திறந்தேன். மெல்ல உள்ளே நுழைத்தாள். கதவின்மேல் என் தோளை மெல்ல வைத்து மூடி அவளை பின் தொடர்ந்து உள்ளே சென்றேன். உள்ளே ஒரு தடவை என் கையைப் பிடித்துக் கொண்டாள். நாங்கள் இருவருமே ஒன்றும் பேசவில்லை.

படிக்கட்டின் மேலேறி இரண்டு மாடிகள் கடந்து மூன்றாவது மாடிக்கு வந்தடைந்தோம். அவளே தான் இருக்கும் பகுதியின் கதவின் பூட்டைத் திறந்தாள்; பின்பு இரண்டாவது கதவை திறந்தாள். என் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றாள். அது வரவேற்பறை போல் இருக்கிறது. சுவரில் கடிகாரம் திக்திக் என்று ஓடிக்கொண்டிருப்பதை என்னால் கேட்க முடிந்தது.

உள்ளே வந்தபின் ஒருதடவை அவள் அசையாமல் நின்றாள். அவள் தன் கரங்களை என்மேல் திடீரென்று போட்டு அணைத்தாள். நடுக்கத்துடன் என் வாயில் உணர்ச்சிப்பெருக்கத்தோடு முத்தமிட்டாள். வாயில்தான் முத்தமிட்டாள்.

" உட்காரேன். இதோ சோபா. விளக்கு கொண்டு வந்து விடுகிறேன்." அவள் விளக்கு ஏற்றினாள்.

வியப்பு அடைந்தவனாய் ஆனாலும் ஆவல் உள்ளவனாய் நான் சுற்றிலும் பார்த்தேன். நான் பெரிய நன்கு சௌகரியமாக்கப்பட்ட வரவேற்பு அறையில் இருப்பதை உணர்ந்தேன். அந்த அறையின் பக்க வாட்டில் உள்ள பாதியளவு திறந்த கதவுகள் வழியே சென்றால் அது பல அறைகளுக்கு அழைத்துச் செல்லும் போலிருக்கிறது. இத்தகைய நபரை நான் சந்திக்கிறேன் என்பதை என் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு என்னால் ஊகிக்க முடியவில்லை.

" என்ன அழகான அறை! இங்குதான் குடியிருக்கிறாயா ?" என வியந்தேன்.

" ஆமாம். இதுதான் என் வீடு." அவள் பதில் சொன்னாள்.

" இது உன் வீடுதானே ? அப்படியென்றால் உன் பெற்றோர்களுடன் தான் வாழ்கிறாயா ?!"

" ஓ ! இல்லை. நீ நிச்சயம் அறிவாய் நான் வயதுவந்தவள் என்பதை " என சிரித்தாள்.

அவள் தன் முகத்திரையையும் போர்த்திக் கொண்டிருந்த உடைகளையும் அகற்றினாள்.

" அங்கே பார். நான் உன்னிடம் என்ன சொன்னேன் " அவள் சொல்லி ஏதோ அடக்க முடியாத உணர்ச்சியால் உந்தப்பட்டவளாய் தன் கரங்களால் என்னை மறுபடியும் அணைத்தாள்.

அவளுக்கு வயது இருபத்திரண்டு அல்லது இருபத்தி மூன்று இருக்கும். வலக்கை விரலில் மோதிரம் அணிந்திருந்தாள். அதனாலேயே அவள் மணமானவளாக இருக்க வேண்டும். அவள் அழகா? இல்லை. அவள் முகத்தில் திட்டுத் திட்டான புள்ளிகள் இருந்தன; புருவம் இல்லை என்றே சொல்லலாம். ஆனால் அவளிடம் ஒரு துடிப்பு இருந்தது. அவள் வாய் அபூர்வ அழகாய் இருந்தது.

அவள் யாரென்றும், அவளுக்கு மணமாகியிருந்தால் அவள் கணவன் எங்கு இருக்கிறான் என்றும், நான் யார் வீட்டில் இருக்கிறேன் என்றும் நான் அவளைக் கேட்க விரும்பினேன்.

ஆனால் நான் வாயை திறக்கும் போதெல்லாம் என்மேல் அணைத்த வண்ணமாய் விழுந்தாள். நான் ஆவல் கொள்ளாதபடி தடுத்தாள்.

" என் பெயர் எல்லன் " என விளக்கினாள்.

" உனக்கு குடிக்க ஏதாவது வேண்டுமா ? நான் இப்போது மணி அடித்து அழைத்தால் எவருக்கும் தொந்திரவு நிச்சயம் ஏற்படாது. அதற்குள் படுக்கை அறைக்குள் போங்கள்."

நான் படுக்கை அறைக்குள் சென்றேன். வரவேற்பு அறையில் இருந்து வரும் ஒளி இங்கே கொஞ்சம் வெளிச்சத்தை தந்தது. இரு படுக்கைகளைப் பார்த்தேன். எல்லன் மணியடித்தாள்.

ஒயின் கொண்டுவரச் சொன்னுள். வேலேக்காரி ஒயின் கொண்டுவந்து கொடுத்துவிட்டு திரும்பிப் போனதைக் கேட்டேன். என்னைப் பின் தொடர்ந்து படுக்கை அறைக்குள் வந்த எல்லன் கதவண்டை நின்ருள். நான் அவளை நோக்கி ஓரடி முன் வைத்தேன். அவள் சின்ன குரல் எழுப்பிக் கொண்டு என்னை நோக்கி வந்தாள்.

இதுதான் கடைசி மாலை.

பின்பு என்ன நடந்தது? ஆ. பொறும்! இன்னும் அதிகம் இருக்கிறது.

இன்று காலை நான் எழுந்தபோது வெளிச்சம் வரத் தொடங்கி விட்டது. திரையின் இடுக்குகளின் ஊடே பகல் ஒளி நுழையவரத் தொடங்கியது. எல்லன் கூட விழித்துக்கொண்டாள். அவள் கரங்கள் வெண்மையாய் பட்டுப் போல் இருந்தன; அவள் முலேகள் எப்போதும் போல் இல்லாமல் அதிக உயரம் கொண்டிருந்தன. நான் அவளிடம் ஏதோமுணுமுணுத்தேன். அவள் தன் உதடுகளால் என் வாயை மூடினுள். நெகிழ்ச்சியால் ஊமையாகி இருந்தாள். நாளானது ஒளி பெற்றுக்கொண்டு வந்தது.

இரண்டு மணி நேரம் கழித்து எழுந்து நின்றேன். எல்லனும் எழுந்து தன் ஆடைகளை சரி செய்து கொண்டிருந்தாள். அவள் தன் செருப்புகளைப் போட்டுக் கொண்டாள். இப்போது கூட ஒரு பயங்கரமான கனவு போல் இருக்கும். ஏதோ ஒன்றை நான் அப்போது உணர்ந்தேன். கழுவும் இடம் அருகே நான் நின்று கொண்டிருந்தேன். பக்கத்து அறையில் எல்லனுக்கு ஏதோ வேலே இருந்தது. அவள் கதவை திறந்தபோது நான் திரும்பி உள்ளே பார்த்தேன். அந்த அறையின் திறந்த சன்னலிலிருந்து சில்லென்ற ஒன்று உள் நுழைந்து என் மேல் மோதியது. அந்த அறையின் நடுவில் ஒரு மேஜை மேல் பிணம் ஒன்று இருப்பதை தட்டுத்தடுமாறி ஊகித்தறிந்தேன். வெண்ணிற ஆடையில் ஒரு பிணம் சவப்பெட்டியில். சதையற்ற அவன் கால்முட்டி எலும்புகள் மூடிய துணியைத் தூக்கிக்கொண்டிருந்தன, வெறியில் மடித்த கைமுட்டிபோல: அவன் முகம் வெளிறிய மஞ்சள் பூத்து மிக பயங்கரமாக இருந்தது. நிறைந்த பகல் ஒளியில் ஒவ்வொன்றையும் என்னுல் பார்க்க முடிந்தது. நான் ஒன்றும் சொல்லாமல் திரும்பி விட்டேன்.

எல்லன் திரும்பி வந்தபோது, நான் உடுத்திக்கொண்டு வெளியில் போக தயாராக இருந்தேன். அவள் அணைப்புகளுக்கு என்னுல் இசைவுகொடுக்க முடியவில்லே; ஏற்றுக்கொள்ள முடிய வில்லே. அவள் இன்னும் ஆடைகளை உடுத்திக் கொண்டாள். அவள் கீழ்வரை தெருக் கதவுவரை என்னை விட்டு, செல்ல வந்தாள். அவள் விருப்பப்படியே விட்டுவிட்டேன். நான் ஒன்றுமே பேசவில்லே. அவள் கதவருகே வந்த போது-சுவரை ஒட்டியபடி யாரும் பார்க்காத வண்ணம் இருந்தாள்.

"நல்லது :குட்பை" என ரகசியமாகச் சொன்னுள்.

"நாளை வரை?" அவளை கொஞ்சம் சோதிக்கலாம் என அப்படிக் கேட்டேன்.

"இல்லே. நாளை வரை இல்லே."

"ஏன் நாளைக்கு கூடாது?"

"பல கேள்விகள் வேண்டாம். அன்பே. நாளைக்கு சவ ஊர்வலத்திற்கு போகிறேன். என் உறவினர் ஒருவர் இறந்து விட்டார். இப்போது அங்கே—உனக்கு அது தெரியும் இல்லேயா?"

"ஆனுல் நாளைக்கு மறுநாள்?"

"ஆமாம். நாளைக்கு மறுநாள் இங்கே இந்த கதவண்டை நான் உன்னை சந்திக்கிறேன். :குட்பை"

நான் அங்கிருந்து கிளம்பி விட்டேன்.

அவள் யார்? அந்த பிணம்? அந்த கை விரல்கள் மடங்கி, வாயின் ஓரங்கள் தொங்கி—என்ன பயங்கரமாய் இருக்கிறது! நாளை மறுநாள் அவள் காத்துக் கொண்டிருப்பாள்.

நான் அவளை மறுபடியும் பார்க்கத்தான் வேண்டுமா?

நான் நேராக பெர்னினு கபேவிற்கு சென்று டைரக்டரியைக் கேட்டேன்.

காமலி சொங்கேவிய்—அந்த எண்ணைத் தேடினேன். அங்கே—அந்தப் பெயர் இருந்தது. காலே பத்திரிகை வரும்வரை நான் கொஞ்ச நேரம் காத்திருந்தேன். இறப்பு அறிவிப்புகளைக் கொண்ட அந்த பக்கத்தை அவசரமாக புரட்டினேன் நிச்சயமாக அவளுடையதான். நான் பார்த்தேன். முதல் பெயராக பெரிய எழுத்தில் இருந்தது. "என் கணவர்—ஐம்பத்து மூன்று வயதானவர். நீண்ட காலம் நோய்வாய்ப்பட்ட பின்பு இன்று இறந்து விட்டார்." அந்த அறிவிப்பு முந்தைய நாள் தேதியிடப்பட்டிருந்தது.

நான் நீண்ட நேரம் உட்கார்ந்து எண்ணினேன்.

ஒருவன் மணம் செய்து கொள்கிறுன். அவனைவிட அவள் வயதில் முப்பதாண்டுகள் குறைவாக இருக்கிறுள். அவனுக்கு, தொடர்ந்து இருந்துவரும் நோய் பீடிக்கிறது. ஒரு நல்ல நாளில் அவன் இறக்கிறுன்.

அந்த இளம் கைம்பெண் விடுதலைப் பெருமூச்சுவிடுகிறுள்.

தமிழாக்கம்:

**கி. அ. சச்சிதானந்தம்**

# நாவலில் பாத்திரப் பேச்சு

எழில்முதல்வன்

நாவலில் பாத்திரங்கள் பேசுகிற பேச்சு ஓர் இன்றியமையாத உறுப்பாகும். உலக நாவல் இலக்கியத்தை ஊன்றி நோக்கினால் மிகப் பழைய நாவல்களில் பாத்திரப் பேச்சுக்கள் மிகக் குறைந்த இடத்தையே பெற்றிருப்பதை அறியலாம். காரணம் அதன் தேவையையும் ஆற்றலையும் அவ்வாசிரியர்கள் உணராமையே ஆகும். 'ஒரு ஊரில் ஒரு ராஜா; ராஜாவுக்கு ஒரு ராணி; ராணிக்கு ஒன்பது பிள்ளைகள்' என்பதுபோல 'படர்க்கைப் பார்வை'யிலேயே கதை சொல்லப்பட்டதால் பாத்திரப் பேச்சுக்கள் முக்கிய இடத்தைப் பெறவில்லை. நாடகத்தில்தான் பாத்திரங்கள் தங்களுக்குள் நேரடியாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்; இத்தகைய பேச்சுப் பரிமாற்றம் நாவல்களுக்குத் தேவையில்லை என்ற கருத்தும் கூட இருந்திருக்கிறது.

நாவலாசிரியர்களில் இருவர் உண்டு; ஒரு சிலர் புறச்சித்திரிப்பிலேயே அதிக நாட்டம் கொள்பவர்கள்; பாத்திரத்தின் தோற்றம், நடை உடை, பாவனை, பழக்க வழக்கங்கள், சுற்றுப்புற சூழ்நிலை, அவர்களது வாழ்க்கைப் போக்கு முதலியவற்றை வருணிப்பதிலேயே அதிகமாக ஈடுபடுவர். வேறு சிலர் அகச்சித்திரிப்பில் கவனம் செலுத்துவர். பாத்திரங்களின் எண்ணங்கள், மனப் போராட்டங்கள், உணர்ச்சிச் சுழிப்புகள் முதலியவற்றையே வெளிப்படுத்திக் காட்டுவதில் ஆர்வம் காட்டுவார்கள். முன்னவர்களை Diel—Plot Novelist—என்றும், பின்னவர்களை Inner Working Novelist—என்றும் கூறுவது உண்டு. அகச்சித்திரிப்பு நாவலாசிரியர்கட்குச் சிறந்த கருவியாக அமைவது பாத்திரப் பேச்சுக்களே ஆம்.

நாவலில் 'பாத்திரப் பேச்சு' என்பது பொதுவாக, ஒரு பாத்திரம் இன்னொரு பாத்திரத்தோடு வாய்விட்டுப் பேசுவதாக எழுதிக் காட்டப்படும் பகுதியே ஆகும். ஆனால், 'பாத்திரப் பேச்சு' என்ற தொடரை அதனினும் விரிந்த ஓர் பொருளிலேயே நான் இங்கு கையாளுகிறேன். அது உரையாடலை மட்டுமின்றி, 'தனிமொழி' (Monologue) அகமன ஆய்வுப் போக்கில் பிறக்கும் 'உள்நோக்குத் தன்னுரை' (Internal Monologue) அனைத்தையும் உள்ளடக்கியே சுட்டுகிறது.

## II

நாவலில் உரையாடலைக் (Conversation) கையாளுவது என்பது மிக அரிய செயல். சிறந்த திறனும், நிறைந்த பொறுமையும் இன்றேல் இதில் தோல்வியே விளையும். செம்மையான முறையில் அமைக்கப்படாத உரையாடல் கதையின் 'இழுப்புவிசை'யைத் (Tension) தளர்த்தி, படிப்போரையும் சலிப்பு கொள்ளச் செய்து விடும். இரு மாந்தரைச் சந்திக்க வைத்து, அவர்களது பேச்சின் மூலம் அம்மாந்தரின் பண்புகளையும், உணர்ச்சிகளையும் எடுத்துக் காட்டி, கதையையும் சுவை குன்றாமல் நடத்தி செல்வதில் ஒரு சிலரே வெற்றி பெறுகின்றனர்.

பிளாபர்ட் என்பவர் 'மேடம் பவாரி' என்ற நாவலை எழுதும் போது தனக்கேற்பட்ட அனுபவம் ஒன்றைக் குறித்திருக்கிறார். பவாரியும், இளைய பாதிரியார் ஒருவரும் சந்தித்துப் பேசும் கட்டத்தை எழுதி முடிக்க அவர் எவ்வளவோ சிரமப்பட்டாராம். அவர்களுக்கிடையே உரையாடலை எங்ஙனம் அமைப்பது என்று தெரியாமல் திகைத்தாராம், இதைக் குறிப்பிட்டு 'இந்த இடத்தில் பாவாரி என்னைப் பைத்தியமாக்கி விட்டாள்; கையற்ற நிலையில் நான் இருந்தேன். என்று கழிவிரக்கத்தோடு குறிப்பிட்டிருக்கிறார் அவர். பிளாபர்ட் போன்ற கலைமேதைகட்கே அந்த நிலை என்றால், திறன் குறைந்த மற்றவர்களைப் பற்றி நாம் என்ன சொல்ல முடியும் ?

சில எழுத்தாளர்கள் தம் காலத்திய மக்களின் பேச்சு வழக்கில் மிகுந்த ஈடுபாடும், அவற்றைக் கதையில் அமைத்துக் காட்டுவதில் ஆர்வமும் கொண்டிருப்பார். அதனால், தங்கட்கு இருக்கும் மிகையான ஆர்வத்தால் நா வின் பெரும்பகுதியை நாடகப் போக்கில் மாற்றி விடுவார்கள். சில வேளைகளில் வேண்டாத பகுதிகளையும் கூட உரையாடல் முறையில் நெடிது விரித்து, கதையின் கட்டுக் கோப்பைச் சிதைத்து, ஒரு கதாகாலட்சேபம் போல ஆக்கி விடுவார்கள். இதுவும் தவறுதான்.

நாவலில், உரையாடல் என்பது மிகச் சாதாரணமான பொதுச் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் வாயில் அல்ல; வாசகர்கட்கு வெறும் தகவல்களைத் தரும் சாதனமும் அல்ல. ஒரு குறிப்பிட்ட மனிதரையோ, இடத்தையோ வருணிப்பதற்கு அதைப் பயன் படுத்துவதும் கூடாது. கதாசிரியன் தன் சித்தாந்தங்களை முரசு கொட்டிப் பிரசாரம் செய்ய தனக்குத் தானே அமைத்துக் கொள்ளும் கட்சிமேடையும் அன்று, இவ்வுண்மைகளை உணர்ந்து போற்றும் போதுதான் உரையாடல் அழகும், வேகமும் பெறுகிறது.

நாவலில் அமையும் நல்ல உரையாடல் கருவின் வளர்ச்சி, கதையின் இயக்கம். கதை மாந்தரின் பண்பு விளக்கம் முதலியவற்றிற்குக் காரணமாக அமைதல் வேண்டும்.

முதலில் உரையாடல் கதைக் கருவின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிய வேண்டும்; கதையின் முன்னேகிய வளர்ச்சிக்குத் தூண்டுதலாக இருந்து அதை இயக்குதல் வேண்டும். ஆசிரியன் உரையாடலை அமைக்கிற போது,

இது கருவின் வளர்ச்சியைக் காட்டுமா? கதையின் இயக்கத்திற்குத் தேவைதானா? பாத்திரப் பண்புகளை விளக்க இது எந்த அளவுக்குப் பயன்படும்? என்பன போன்ற வினாக்களைத் தனக்குள்ளாகவே கேட்டுக் கொள்வது நல்லது.

தொடுத்துக் கிளத்தலாகவே (narrative) கதை செல்கிறபோது படிப்போருக்கு சுவை தோன்றுவதில்லை. இடையிடையே நாடகப் போக்கும் அமையும் போதுதான் காட்சி மெய்ம்மை உருவாகிறது. 'சொல்லுவதும்', 'காட்டுவதும்' கதாசிரியனின் முக்கிய வேலைகள். ஒன்றைக் 'காட்ட' வேண்டுமானால் 'நாடகப் பாங்கு' பொருந்த சித்திரிக்க வேண்டும். நாடகப் பாங்கு உருவாக உரையாடலே முக்கியம். எனவே பேச்சினைக் கையாளுகிற போது அன்றாடம் நடைபெறும் உரையாடல்களின் போக்கை ஒட்டியே அமைத்தல் வேண்டும். அன்றாட உரையாடல்களும் அப்படியே இருக்கக் கூடாது. தெளிவில்லாத சொற்களை விட்டு, தேவையற்ற சொற்களையும் விட்டு, கருத்தையும் உணர்ச்சியையும் ஊட்டுகிற நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்து அமைத்தல் வேண்டும்,

உரையாடலின் மூலம் பாத்திரப் பண்பை விளக்கும் போது பாத்திரப் பேச்சுக்கள் இயல்பானதாகவும், செயற்கை வண்ணம் விரவாதனவாகவும் அமைதல் வேண்டும். பாத்திரத்தின் இயல்புக்கு ஏற்றபடி பேச்சு இருக்க வேண்டும். படிக்கின்றவன் 'இந்தப் பாத்திரம் இப்படித்தான் பேசும்; இதுதான் இயற்கை இதைத் தவிர வேறு முறையில் பேச வழியில்லை; பேசவும் முடியாது என்று கருதுகிறாற்போல் அத்துணைப் பொருத்தமாக இருக்க வேண்டும். படித்தவன் பேசுவதற்கும் படிக்காதவன் பேசுவதற்கும் மாறுபாடு உண்டு. குழந்தை ஒன்று பேசுவதற்கும், குமரப் பருவத்தில் உள்ள ஒருவன் பேசுவதற்கும் வேற்றுமை உண்டு. நகரத்து மாந்தன் பேசும் முறை ஒரு வகை; நாட்டுப் புறத்து உழைப்பாளி பேசுவது மற்றொரு வகை. இந்த நுட்ப வேறுபாடுகள் அனைத்தும் ஆசிரியனுக்குத் தெரிந்திருந்தால்தான் அவனால் நல்ல உரையாடலைப் படைக்க முடியும். இந்த மாறுபாடுகளே இல்லாமல் எல்லாப் பாத்திரங்களும் ஒரே மாதிரியே பேசுவது போல் எழுதுவது ஆசிரியனின் புலமைக் குறைபாட்டையே காட்டும்.

பாத்திரத்தின் தன்மைக்கு ஏற்றபடி பேச்சு நடை உயர்தனிச் செம்மையாகவோ, கொச்சையாகவோ—எப்படி வேண்டுமானாலும் அமையலாம். ரிக்ஷாக்காரன் பேசுவதாக எழுதினால்—அவன் எப்படிப் பேசுவானோ அப்படித்தான் எழுத வேண்டும். பண்டிதர் ஒருவர் பேசுவதாக எழுதினால்—அது பண்டிதப் பேச்சாகவே இருத்தல் வேண்டும். ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரத்தில் வரும் 'ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளை பேசுகிற பேச்சை இங்கே நினைவு கொள்ள வேண்டும்; அதே போல் ஜெயகாந்தனின் கதை ஒன்றில் வரும் ரிக்ஷாக்காரன் பேச்சையும் காண்க.

''ங்கோத்தா! இனிமே நீ வெளியே போறது இல்லேம்மே! பாத்துக்கறேம்மே, சிங்காரம்! மாவு பூசிக்கிறது, மையி வெச்சிக்கிறது யாருக்குமே இதெல்லாம்! ங்கோத்தா! நீ சம்பாரிக்கிற திமிருதானே? மொதல்லே அத்தெக் 'கட்' பண்றேன்...''

இந்த நடை கொச்சையாக இருந்தாலும், பாத்திரத்தின் இயல்புக்குப் பொருத்தமாகவே இருக்கிறது.

சிலர் இக் கருத்தை மறுப்பது உண்டு. யதார்த்தம் வேண்டும் என்பதற்காகக் குறுமொழிகளையும், இலக்கண வழுவான தொடர்களையும் அப்படியே கையாள வேண்டியதில்லை. பாத்திரத்தின் பண்பிற்கு ஏற்ப அவை பேசும் பேச்சுக்களில், சில குறிப்படையாளமான சொற்களையும், சொல்நிலை மாற்றங்களையும், ஒலித்திரிபுகளையும் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சுட்டிக் காட்டினாலே போதும் என்று கூறுவர்.

உரையாடல் மிகக் குறுகியதாக இருப்பது நலம்; நீண்ட வாக்கியங்கள் பொருந்தா, அன்றாடப் பேச்சில் ஒரே மூச்சில் யாரும் பத்துப் பதினைந்து வாக்கியங்களைத் தொடர்ந்து பேசுவதில்லை. உண்மை இவ்வாறாக இருக்க நாவலில் முரண்பட அமைதல் கூடாது; இன்னும் ஒன்று ஒரே ஆள் மணிக்கணக்காப் பேசுவதும், மற்றவர்கள் கேட்டுக் கொண்டிருப்பதும் (பொதுக் கூட்டம், வகுப்பறை தவிர) நிஜ வாழ்வில் இல்லை, எனவே நாலைந்து பேர் சேர்ந்து உரையாடும் கட்டத்தில் ஒரு பாத்திரம் மட்டுமே மிக அதிகமாகப் பேசுவது போல் காட்டுவது தவறு.

சில எழுத்தாளர்கள் ஒரு முறையைக் கையாளுவார்கள்: இரு கதை மாந்தர் பேசும் காட்சியை எழுதும் போது, ஒருவர் இரண்டு மூன்று பாராக்களைப் பேசுவார்; பின் அடுத்தவர் இரண்டு பாராக்களைப் பேசுவார்; பின் மாறி இரண்டு பேரும், பாராக் கணக்கில்—பக்கக் கணக்கில் பேசித் தீர்ப்பார்கள். இத்தகைய உரையாடற் போக்கை Stephen Minot என்பார் 'Dialogue in solid blocks' என்றி குறிப்பிடுவார். கொற்றன் சுவர் எழுப்பும் போது பெரிய பெரிய கற்களை எடுத்தெடுத்து, ஒன்றன் மேல் ஒன்றாய் அடுக்கிச் சாந்து பூசுவது போன்ற செயல் உது. இம்முறையும் விரும்பத்தக்கது அன்று.

உரையாடலில் உயிரோட்டம் இருக்க வேண்டியது அவசியம், அலங்கரித்து வைத்த பிணம் போல சொற்கள் ஆற்றலற்று கீழே விழுதல் கூடாது. வலிவும், வேகமும் சொற்களில் கருக்கொண்டு இருக்க வேண்டும். படிப்போனின் ஆர்வத்தைக் தூண்டுவனவாய் இருத்தல் மிக அவசியம். மேலும் கதை மாந்தரிடையே இழையோடி நிற்கும் உறவையும், தொடர்பையும் விளக்கும் வகையில் அமைவதே சிறப்புடையது.

குறைபாடுகள் இல்லாத யதார்த்தமான உரையாடல்களை அருமையாகக் கையாளும் திறம் தி. ஜானகிராமனிடத்தில் உண்டு,

சில ஆசிரியர்கள் பாத்திரப் பேச்சுக்களை அமைக்கும் போது அதனைத் தங்கள் கொள்கை முதலியவற்றைப் பிரச்சாரம் செய்யும் வாயிலாகக் கருதி விடுகின்றனர். பாத்திரங்கள் தங்கள் இயல்புக்கு மீறிப் பேசுவதாகப் படைப்பது பெருங்குற்றம்; அது ஆசிரியனின் கலைத் தன்மைக்கு இழுக்கேயாகும். டாக்டர். மு. வ. வின் பாத்திரப் பேச்சுக்கள் இதற்குச் சான்று,

## III

சில ஆசிரியர்கள் தங்கள் பாத்திரங்களைப் பேச விட்டு விட்டு அந்தப் பேச்சின் சிறப்பை மற்றொரு பாத்திரத்தின் மூலம் பாராட்டச் செய்வார்கள். இது ஒரு வகையில் தங்கள் திறனைத் தாங்களே புகழ்ந்து கொள்வது போன்றது. இது போன்ற இடங்களில் உண்மையிலேயே உரையாடல் செம்மையாக அமைந்திருப்பதைக் காணலாம்.

## IV

பாத்திரப் பேச்சுக்கள் சமூக நாவலில் அமையும் முறைக்கும், சரித்திர நாவலில் அமையும் முறைக்கும் மாறுபாடு உண்டு. ஒரு சரித்திர நாவல்—அது எந்தக் காலத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுந்ததோ அந்தக் காலத்து மொழிவழக்கைப் பிரதிபலிக்க வேண்டும். வரலாற்று நாவல் புனைவோர், உரையாடலை அமைக்கும் போது இந்த பிரக்ஞையோடு இருத்தல் வேண்டும். இனறேல் அவ்வுரையாடற் பகுதிகள் 'காலவழு' என்னும் குற்ற முண்டாகக் காரணமாய் அமைந்து விடும்.

## V

'பாத்திரப் பேச்சி'ல் உரையாடல் மட்டு 'தனிமொழி'யும், 'உள் நோக்குத் தன்னுரை'யும் அடங்கு மென்று கூறினேன்.

தற்கால நாவல்களில் அகமன ஊடுருவல் நோக்கு சிறப்பிடம் பெற்றுள்ளது. உளவியல் துறையின் வளர்ச்சியும், ப்ராய்டு, யூங் போன்றோரது சிந்தனைகளும் தற்கால நாவல் இலக்கியத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. இப்பாதிப்பால் புதுமையும் பரிணமித்திருக்கிறது.

'தன்மொழி'—என்பது ஒரு பாத்திரம் தானே பேசுவது போல் எழுதப்படுவது. யாரோ 'கேட்போர்' ஒருவர் இருப்பது போலவும், அவரை மனத்தால் பாவித்துப் பேசுவது போலவும் இது அமையும், இதன் மூலம் ஆசிரியர் அந்தப் பாத்திரத்திற்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியையும், அப்போதைய உணர்ச்சி நிலையையும் வாசகர்கட்கு தெரிவிக்கிறார். இந்த விரகு பழைய நாடகங்களில் நிறைய உண்டு.

அகமன ஊடுருவல் நோக்கில் அமைந்த பாத்திரப் பேச்சுக்களை 'உள் நோக்குத் தன்னுரை' எனலாம். 'நனவோடை' என்பதும் இதன் பாற்படும்.

ஏதோ ஒரு பிரச்சினையில் சிக்குண்டதாக வைத்துக் கொள்வோம். அந்த நிலையில் நமக்கு நாமே, கேட்போர் யாரும் இல்லாத நிலையில், கேட்கப்பட வேண்டும் என்ற பாவனையும் இன்றி. சிலவற்றை அந்தரங்கமாக—இருதயத்தின் மௌன பாதையில்-பேசிக் கொள்கிறோம். பேச்சில் இரண்டு வகை உண்டு; ஒன்று ஒலியாக வெளிப்பட்டு கேட்போனின் செவியை அடைவது. இதனை வேண்டுமானால் 'ஒலிப் பேச்சு' என்று கொள்வோம். இன்னொன்று நினைவிலே பிறந்து, ஒலியாக உருமாற்றம் கொள்ளாமல், இதயத்திலேயே உள்ளடங்கிப் போவது. இதனை 'மௌனப் பேச்சு' என்று கொள்வோம். இவ்விரண்டில் பின்னைய ஒன்றையே 'உள்நோக்குத் 'தன்னுரை' என்கிறோம்.

உள்நோக்குத் தன்னுரை பாத்திரத்தின் அடிமனத்தில் கிடக்கும் உணர்ச்சிப் படிவுகளை வெளிப்படுத்திக் காட்ட உதவுகிறது.

மனித மனத்தில் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடங்கி வரும் அகமன எதிரசைவுகளையும், எண்ணப் பதிவுகளையும், தர்க்க ரீதியான பொருத்தப்பாடின்றி, அலைஅலையாக எழும் உணர்வுகளையும் அப்படி அப்படியே தீட்டுவதைத்தான் 'நனவோடை' என்கிறோம். இதனையும் பாத்திரப் பேச்சாகவே கொளளல் வேண்டும். ('நானவேடை') பற்றிப் பிறகு விரிவாக எழுத இருப்பதால் இங்கு இந்த அளவோடு அமைகிறேன்.)

## VI

ஒரு நாவலை படிக்கின்ற வாசகன் பாத்திரப் பேச்சுக்களை முழுமையாக உணர்ந்து கொள்ள 'சுட்டு விரகு' தேவை. 'என்றான்' என்ற சொற்களே இத்தகு சுட்டு விரகாக அமைகின்றன.

இரு பாத்திரங்கள் மாறி மாறிப் பேசுகின்ற போது அப்பேச்சுக்களை "......"—மேற் கோள் குறியிட்டுக் காட்டினால் மட்டும் போதாது. பேச்சைத் தொடர்ந்து சுட்டு விரகாக ''என்றான் சு'' —''என்றாள் கு''—என வருதல் வேண்டும். 'அ' என்ற ஒருவரும் 'ஆ' என்ற ஒருவரும் பேசுவதாக இருந்தால்—பேச்சின் நடுவே அவ்வப்போது 'அ' பேசுகிறாரோ?—'ஆ' பேசுகிறாரா—என்பதைத் தெளிவாக உணர்த்த வேண்டும் இருவர் மட்டும் பேசுகிற சிறு காட்சியாக இருந்தால் சுட்டுவிரகு தேவையில்லை. இருவர் மட்டும் பேசுகிற பெருங் காட்சியாக இருந்தாலும் 'என்றான்' 'என்றாள்' என்ற சுட்டுவிரகு மிக அவசியம். பலர் கூடி உரையாடும் இடத்தில் சுட்டு விரகு அமையாவிட்டால் வாசகனுக்குக் குழப்பமே விளையும்.

## vii

இதுகாறும் கூறியவற்றால் 'பாத்திரப் பேச்சு' என்றால் என்ன என்பதையும், அது கதை இல்க்கியத்தில் பெறும் இடத்தையும், அதனை நாவாசிரியர்கள் பயன்படுத்தும் நுட்பங்களையும் ஓரளவு அறிந்தோம். எனவே ஒரு நாவலின் வெற்றிக்கு நல்ல உரையாடலும் காரணம் என்க.

குறுங்காவியம்

# நீ இன்று இருந்தால்

சி. சு. செல்லப்பா

இன்று நீ இருந்தால்
தொண்ணூற்றி ஒன்பது
சத ஆண்டும் அடுத்து
நீ இருந்ததோ எழுபத்தொன்பது
சதாபிஷேக ஆண்டும் அடுத்து
ஆனால் உனக்குப் பின்னால்
ஆண்டுகள் இன்றோடு இருபது.

உனக்குப்பின் இருபது ஆண்டுகள்
கோடிக் கணக்கில் விநாடிகள்
ஆனால் உனக்கு முன்னால்
இந்த விநாடிகள் ஆண்டானால்
கோடிக் கணக்கில் ஆண்டுகள்.

கோடிக் கணக்கில்
கோடி கோடிக் கணக்கில்
திரேதா, துவாபரா, க்ருத, கலி
பிரளயம்.
திரேதாக்கள், துவாபரங்கள்
க்ருதங்கள், கலிகள்
பிரளயங்கள்
மறு...மறு...மறு...மறு

பிரமன்கள், விஷ்ணுக்கள், சிவன்கள்
அவதாரங்கள், அக்ரமங்கள்
துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனங்கள்
'தர்மஸ்தாபனார்த்தம்
சம்பவாமி யுகேயுகே.'

தர்மம் காக்க
திகிரி சுழற்றினோன் எத்தனையோ
கோதண்டம் எடுத்தோன் எத்தனையோ
கோடரி சுமந்தோர் எத்தனையோ
தூணுக்குள் மறைந்தோன் எத்தனையோ
மரத்துக்குப் பின் மறைந்தோன் எத்தனையோ
மீண்டும்...மீண்டும்...மீண்டும்

எத்தனை ருக், எத்தனை யஜுர்
எத்தனை சாமம், எத்தனை அதர்வணம்
எத்தனை உபநிஷத்?
நீதிக்கு எத்தனை மனுவோ
நெறிக்கு எத்தனை தருமனோ
வாய்மைக்கு எத்தனை அரிச்சந்திரனோ
எத்தனை குருக்ஷேத்திர கீதைகளோ?

உனக்குமுன் இத்தனையும்
காலக்கணக்கெடுக்கும்
சித்திரகுப்தர்களின்
கைப்பிடிக்கு வழுக்கிவிட்ட
காலாதீத நிகழ்ச்சிகள்;
நாய்க்கண் பார்வை மனிதனின்
நம்பாமையில்
'தெய்வமே பொய், மனித பயத்தை
பயன்படுத்தி உருவகித்த கற்பனை'
என்ற பகுத்தறிவுப் பார்வையில்
சரித்திர யதார்த்தத்துக்கு
உட்படாத பொய்கள்;

பிறப்பு இறப்புநாள் தெரியவராத
கி. பி. க்கும் கி. மு.'க்கும் அடங்காத
ஜாதகமற்ற கற்பனை உருவங்கள்;
தெய்வங்கள், அசுரர்கள், மனிதர்கள்,
ஆறுமுகம் நாலுமுகம் பத்துமுகம்
யானைமுகம் சிங்கமுகம்
ஆண் உடம்பில் பெண்பாதியான பிறவிகள்,
உனக்குமுன் இத்தனையும்
இன்னும் எத்தனையோ.

இவை அத்தனையும் இன்று
கடைவிரித்துக் கதை சொல்லும்
பௌராணிகனுக்கு ஆகாரம்,
தூணில் சாய்ந்து கொட்டாவி விட்டு
கதை கேட்கும் கிழங்களுக்கு
மோட்சத்துக்கு ஆகாரம்
நடுவே தட்டேந்தும் பக்தி விலை (வலை)
தரகருக்கு
தினப்படி வசூல் விசாரம்.

வேதம் தாண்டி, புராணம் தாண்டி
ஆகமம் தாண்டி, இதிகாசம் தாண்டி
சாஸ்திரம் தாண்டி, காவியம் தாண்டி
'மண்வெட்டி குந்தளத்தோடு
பிணக்குழி பறித்து'
பி. சி. ஏ. டி. க்குள் இடறினால்
போதி மரத்தின் கீழ்
'சின்மயமானதோர் சாந்தி முகம்'
'பிண்டியின் கொழுநிழலில்
பிறவி நோய் கெட
விண்டவிழ் கணை கதிர்வீரன்'
'இம்பர் வாழ்வின் இறுதிகண்டு
உண்மையின் இயல்புணர்த்திய சங்கரன்'
'பேரருட் சுடர் வாளேந்திய மகதன்'
பவானி அருள் போர் வாள் ஏந்தி
'தீய கோல் வீழ்த்திய மராட்டியன்
வெண் குதிரை லகான் பிடித்து
வெள்ளை ரத்தம் பதம் பார்த்த யுவராணி
கொள்ளை கும்பினிக்கு எதிராய்
கோட்டைப் போர் செய்த
பாஞ்சாலங் குறிச்சியான்
புல்லறைச் செற்றொழித்த வீரர் பவனி

இவை அத்தனையும் இன்று
பள்ளிப் பையனுக்குப் பாலூட்டும்
பாடம் சொல்லிக்கு ஊதியப்பாடு
பிழைப்பு வழிக்கு பாடத்தில் விழியாய்
மார்க்குககு விடை தேடிக்கு முறைப்பாடு

நூற்றாண்டுகள் தாண்டி
படை எடுப்புகள் தாண்டி
ஆதிக்கப் போர்கள் தாண்டி
கைமாறிய மன்னர் பரம்பரைகள் தாண்டி
பொருளைத் தள்ளி பொருள் அள்ள வந்த
வெள்ளை வணிகரின் பசப்பில் மயங்கி
சூழ்ச்சியில் சிக்கி
பரங்கி சாம்ராஜ்ய பிரஜையாகி

சொந்த நாட்டில் பரக்கடிமையாகி
வெள்ளை நிறம் கண்டு
வெருவல் கொண்டு
வீர்யம் இழந்து
மிடிமை போதும் நமக்கு என்றிருந்த
நடப்பு நாட்களுக்குள் வழி துளாவினால்
'பிறர் எள்ள வீழ்ந்த
அந்த நாள் துயர் தவித்து
உயிர் துடைக்கப் போந்த' பார்சி முதியோன்
கண்டம் கடந்து
மெய் யொளி பரப்பச் சென்ற
'பாபேந்திரியம் செறுத்த
விவேகப் பெருஞ்சோதி'
'சுதந்திரம் என் பிறப்புரிமை'
எனக் கொடி உயர்த்திக் கூவிய
வீர மராட்டிய திலகம்
'இன்ப வளஞ்செறி பண்பல பயிற்றிய'
கலை இலக்கிய நினைவு உருவ
சாந்திநிகேதனன்
ஆண்மைக்குக் குறியீடாய்
நெஞ்சில் அடிதாங்கி
அரவான் களபலியான
ஐந்து நதிவள சிங்கம்
எஞ்சியதை செல்லின் வாய்மீட்டு
இரண்டாயிரம் ஆண்டுத்
தமிழ் இலக்கிய வளம் காத்த
தமிழ்த் தாத்தா
வீர, ஞான, கலை, இலக்கிய ஆளுமைகள்
இன்னும் எத்தனை எத்தனை !

இவை அத்தனையும் இன்று
பாடப் புத்தக வரலாற்றுக் கதைகள்
மேடைப் பேச்சின் வாய் வீச்சுக்கு
பயனுகும் பழம் பெருமைகள்
தகவல் சாதனை அறியா இளம் தலைமுறைக்கு
வெறும் போட்டோ ஆல்பங்கள் !

## 2

இவர்களுக்குப் பின்—
சிலரோடு கூட
சிலர் அடுத்து வர
சிலர் உன் பின் வர
நீ வந்தாய்
உன் முன்னோர்கள்
உதிரத்தில் உதித்து

வாய்மைக்குக் காணிக்கையாய்
நாடு, மனை, மனைவி, மகன் இழந்தோன்
கதையை இளமையில் கேட்டு
சத்யமே உருவானாய்.
'நிஷ்காம்ய கர்மம்'
கீதைக் குரல் கேட்டு
உனக்கன்றி ஊர் உலகுக்கு
உழைப்பவன் ஆனாய்.
மண்டும் துயர் ராமன் கதை கேட்டு
புலனடக்க வெற்றி பெற்றாய்.

பொறுமை தருமன் உதாரணமாக
'கட்டுண்டோம் பொறுத்திருப்போம்
காலம் மாறும்' என
மாறும் காலத்துக்கு
பொறுமையாய் வகை செய்தாய்.
போக வாழ்வு வெறுத்து
போதி மாதவன் வழியில்
உன்னவர் நிலைகண்டு உழன்று
அரை நிர்வாணி ஆனாய்.
காலப் பழசான
மநுநீதி பிரகடனத்தில்
இன்றைக்கான வாழ்வுக்கேற்ற
புது ஷரத்துக்களைப் புகுத்தினாய்.

போர் விளைத்த அழிவு கண்டு
'புத்தம் சரணம் கச்சாமி' என்று
இனி வாளெடேன் என்று சூளுரைத்த
இம்சை கைவிட்ட மகத சாம்ராட் போல்
'தர்மமே அரசியல் அதனிலும்
வெற்றி தரும் என
வேதம் சொன்னதை
முற்றிலும் பேணி'
'பெருங்கொலை வழியாம்
போர்வழி இகழ்ந்து'
பகைத் தொழில் மறந்து
பழிக்குப் பழி வெறுத்து
அகிம்சையே ஆயுதமாய்
'எடுமினோ அறப்போரினை'
என, 'மெஞ்ஞானத் துணிவினை'
'மற்றுங்கு இழிபடு போர்
கொலை தண்டம் பின்னியே
கிடக்கும் அரசியல் அதனில்
துணிந்து பிணைத்தாய்.'

புரட்சிக் கனல் கக்கி
வெள்ளையனை வெருளச் செய்த
லோகமான்யன் கையடை கொடுக்க
அவன் விட்டது தொடர்ந்து
மிதவாதம் வேரறுத்து
புரட்சி வழி அமுக்கி
பலாத்காரமுறை ஒதுக்கி
'வந்தே மாதரம்'
'அல்லாஹு அக்பர்'
உன் தாரக மந்திரங்கள் ஆக
'கத்தி இன்றி ரத்தம் இன்றி
யுத்தம் ஒன்று' தலைமை தாங்கி
ரவி மறையா சாம்ராஜ்யம்
அதிர வைத்து
'மனிதர்க் கெல்லாம் தலைப்படு மனிதன்' ஆனாய்.

கருத்த கண்டத்தில்
கருப்பன் கதி கண்டு
குலை நடுங்கி
அறப்போர் கோடி காட்டி
அகிம்சை ஆயுதம் பதம் பார்த்து
வெள்ளையனை அசைய வைத்து
வெற்றி கண்டு,
'படுக்கையாய் கிடந்த பாரதத்து
பராதீன வெம்பிணி அகற்ற'
ஒத்துழையா நெறியே
சத்தான பாதை எனத் தேர்ந்து
படை திரட்டி முன் நடந்து
ரவுலட் சட்டம் எதிர்த்து
கிலாபத் இயக்கம் நடத்தி
சாம்ப்ரான் வரி மறுத்து
கவுன்சில், காலேஜ், கோர்ட் பகிஷ்கரித்து
கெய்ரோ, பர்டோலி வரி மறுத்து
இன்னலை இன்பமாய் இதயம் தாங்க
பாமர மக்களையும் பக்குவப்படுத்தி
பாரத மண்ணில் முதல் அறப்போராக
'கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய்தாய்.'

'சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை'
'சோர்வும் வீழ்ச்சியும் தொண்டர்க்கில்லை'
என்றாலும்
உன் புது வழி பிடிபட நாள் போதவில்லை,
ஆவேச மனதுகள் பக்குவப்பட வில்லை.
உலகம் கண்ட பொது புரட்சி முறையே
ஆதிக்க அழிவுக்கு கொலை வழியே
சரியானது என
உரம் கொண்ட இளைஞர் சதிப்படை
காவு வாங்கி காவு கொடுக்கும்
வழியே இந்தியாவுக்கு கதி என
தூக்கும் தீவாந்திரமும்
துச்சமாகக் கருதி
உன் வழி ஏற்காத முன்னோர் வழியில்;
அரவிந்தர், சாவர்க்கர், வ. வே. சு.
வ. உ. சி. வாஞ்சி, சுபாஷ்
இன்னோர் ஆதர்சம் கொண்டு
துப்பாக்கியும் வெடிகுண்டும் எடுத்து
பாஞ்சால சிங்கத்தின் உயிருக்குப்
பழிவாங்கிய பகத்சிங் தலைவனாய்
பிரிட்டிஷ் ஆட்சியைப் பதம் பார்த்தது.

'அடிமைச் சிறுமதிக் கூட்டம்
அஞ்சி அஞ்சிச் சாகும் கூட்டம்
'எவன் ஆடையைக் கண்டு
பயந்து எழுந்து நிற்கும் கூட்டம்
இன்னும்
'தொண்டு நிலைமையை
தூவென்று தள்ளத்
துணிவு கொள்ளவில்லை
அதனால்
விரித்து நீ காட்டிய அருஞ்சுக்கை
இரண்டாலும் பார்க்க இயலவில்லை.

## 3

எனவே ஆண்டு பத்தாச்சு
உன் மறுபோர் முஸ்தீப்புக்கு.
'இதுக்குள்ளே மாந்தரெல்லாம்
சோர்வை அச்சத்தை மறந்து விட்டார்.
உன்னைப் புரிந்து கொண்டார்.
'உன் வழியாலேதான்

இந்தியாவுக்கு வரும் கதி'
என உணர்ந்தார்.
உன் சொல் கேட்டார்.

சொரணை இழந்த சாதிக்கு
உப்பிட்ட சோறு தேவை என
சண்டைக்கு அறிகுறி மாடுபிடியாக
உப்பை அறிகுறியாக்கி
உப்பள்ளும் போராட்டம் ஆரம்பித்தாய்.
உப்புப் பெருத விஷயம் என
ஒதுக்கிவிட நினைத்தவர்கள்
உப்பால் உப்பளமே போக
உப்பளத்தால் கடலே போக
கடற்படையால் ஒரு
சாம்ராஜ்யமே போகும்
நிலை யூகித்து
பதறி எழுந்து
உப்பு அள்ளிய கைப்பிடிதளர
லாதியால் கை உப்பச் செய்தனர்.

உப்பு முனையோடு
உடை முனை மது முனை
உன் மும்முனைத் தாக்குதலுக்கு
பாரதமே திரண்டது—பிரிட்டிஷ்
பார்லிமெண்டே அதிர்ந்தது
அடக்குமுறை தாண்டவம் ஆடிற்று.

:பேல்வண்டிமுன் படுத்து
வந்தேமாதரம் உச்சரித்து
உதடு புன்னகைக்க
உயிர்க் காணிக்கை செலுத்திய
பம்பாய் இளைஞன்.

உடைக்கடைமுன் நின்று
விதேசித்துணி வாங்காதே—என
வந்தே மாதரம் உச்சரித்து
படி மறித்துக் கும்பிட்டுக் கேட்க
ஓங்கி விழுந்த அடிகளில்
ஒன்று பொட்டில் வீழ்ந்து
இழந்த பிரக்ஞை திரும்பாமலே
உயிரை அர்ப்பணித்த
திருப்பூர் இளைஞன்.

உன் போரின் வெற்றி பீதியில்
நாசவேலை சதியாக
வெள்ளைச் சாணக்யம் கிளப்பிவிட்ட
மதவெறி ஆட்டம் நடுவே
உயிர்காக்கப் போய்
உயிர்ப்பலியான
கான்பூர் வித்யார்த்தி.

இப்படி
உன் சட்ட மறுப்புப் போரில்
உன் போர் வழி ரத்தத்தில் ஊறி
'முடிவு வழியை நியாயம் ஆக்கும்'
என்ற புரட்டுப் பேச்சுக்கு மாருக
முடிவும் வழியும் ஒரே தொனி என
சாதனையும் வகையும் ஒரே போக்கென
ஈடுபட்டுத் தியாகம் பல செய்த
உன் தனி நோக்கு
லட்சியத் தொண்டர்கள்
இன்னும் எத்தனை எத்தனை !

இவை அத்தனையும் இன்று
வயதானோர் சிறுவீருக்குச் சொல்லும்
வீரப் பழங்கதைகள்.
கேட்டு வியப்புமுகம் காட்டும்
பேதைகளுக்கு புதுத்தகவல்கள்.
ஒப்புக்குப் புகழ்பேசும்
அரசியலார் சுட்டிக்காட்டும்
கண்ணாடிப் பெட்டிக்குள்
மியூசியத் தியாகிகள் !

தொண்டர் படைபெருகி
குண்டர் கெடுபிடி எதிர்த்து
சுதந்திரப்பாதையில் முன்னேற
ஆதிக்க பீடம் அசைந்து கொடுத்தது.
உன்னை அழைத்து
அழும் குழந்தை நாக்குக்கு
இனிக்கும் சர்க்கரையாய்
நாக்கில் நீர் சுரக்கும்
நாய்க்குத் துண்டு எலும்பாய்
சொல் ஏமாத்துக்காட்டி
ஏதோ சுதந்திரம் போல்
பாவனை காட்டி மயக்க முயல
நிழலுக்கு நீயும் மயங்காது
நீயும் முறண்டிடவும்
வேதாளம் திரும்பவும்
முறுங்க மரம் ஏறினதாய்
அதிகார வர்க்கம் பேயாடி
ரத்தம் குடித்து நசுக்க முயல.

அஞ்சிச்சாகும் கூட்டம்
கணிசமாய் குறைந்து போனாலும்
ஆவேச மனதுகள் பல
பக்குவம் பெற்றபோதிலும்
நூற்றியொரு முறை புடம்போட்ட
அயக்காந்த செந்தூரம் போல்
சத்யாக்ரகியை தயார் செய்ய
இன்னொரு பத்தாச்சு ஆண்டு
உன் மறுபோர் முஸ்தீப்புக்கு.

## 4

இதன் நடுவே
ஐந்து வீடும் தரமறுத்த
அரவக் கொடியோனாய்
முன்பு ஹோம்ரூல் மறுத்து
பின்பு மாகாண சுயாட்சி மறுத்து
அதுக்கும் பின்
நட்புறவாய் நீ கேட்ட
குடியேற்ற நாட்டந்தஸ்து மறுத்து
சுதந்திர சாராம்சம் மறுத்து
உடும்புப்பிடி சாம்ராஜ்யம்

மலை இறங்க மூர்க்கமாய் மறுக்க
பூரண சுதந்திரமே இனி
இறுதியான லட்சியம்—என
கடைக்கோடி முடிவு எடுத்து
முழு சுதந்திரம் பெற்றே தீருவேன்
என சூளுரைத் திருந்த நீ
ஒத்துழையாமை, சட்ட மறுப்பில்
புடம்போட்டு எடுத்த
சொக்கத்தங்கங்களை
திரட்டித் தயாரித்து
சத்யாக்ரகத்துக்கு மூச்ரவானாய்.

இதுக்குள்ளே,
பழய பெரும் சாம்ராஜ்யமே
வேர் ஆட்டம் காண்கையில்
புது சாம்ராஜ்ய வெறிபிடித்து
நாஜீயம் பேசி ஒரு ஜர்மானியன்
பாசிசம் பேசி ஒரு இத்தாலியன்
இயல் எதுவும் பேசாது ஒரு ஜப்பானியன்
மூவரும் முக்கூட்டாய்
உலகையே பங்கிட்டுக்கத் துணிய
எதிர் முக்கூட்டாய்
காபிடலிச அமெரிக்கனும்
மார்க்ஸிஸ ரஷ்யனும்
டெமாக்ரடிக் பிரிட்டிஷாரும்
தம்மை பாதுகாத்துக்கச் சேர்ந்து
உலகையும் பாதுகாக்க எழவும்,
இரு கண்டம் தப்பிப்பிழைக்க
முக்கண்டம் ரத்தக்களறியாக
'ஊரெங்கும் விஷப்புகை'யாய்
'வானெங்கும் எஃகிற'காய்
'தெரு வெங்கும் பிணமலை'யாய்
ஆண்டு ஆறு நீர்த்தூளி பட்டதுவே.

நீ கேட்ட சுதந்திரம் மறுத்து
வெள்ளை அதிகாரம்
உன்னையும் போருக்கு பிடித்திழுக்க
இது ஆதிக்கத்துக்கு எதிராக
எதிர் ஆதிக்கப் போட்டி
கொள்ளையை பங்கிட்டுக்க
கோஷ்டிக்கலகம்—எனவே
உன் போரை நீயே செய்துகொள்
என் போர் இல்லை இது என்று
'ஆளுதவியோ பண உதவியோ
தரமுடியாது உனக்கு'—என
எதிர்ப்பு கோஷத்தை முரசாக்கி
முரசொலி கொட்டி
உன்னைத் தன்னுள் வாங்கியவனை
உன்னில் ஒரு பகுதியாய் தோன்றுபவனை
இறுதி லட்சியம் ஈடேறுமுன்
இருப்பிடம் திரும்பேன் என
வாக்குறுதி எடுத்துக் கொண்டவனை
உன்முதல் சத்யாக்ரகி ஆனவனை,
அதிகார யந்திரம் முடுக்கி
ஆள், பொருளுக்கு வலைவிரித்து
ஆசை மிரட்டல் காட்டிய
ஆளும் வர்க்கத்தின் முன் நிறுத்தினாய்.

அருண்ட அதிகார பீடம்
உன்னை அடக்க
அவனை அடைக்கவும்
அம்பராத் தூணி யிலிருந்து
எடுத்து ஏவினாய்
ஆயிரம் ஆயிரம் சத்தியாக்ரகிகளை.
ஆளும் பொருளும் ஆதரவும்
ஆளுவோருக்குக் கணிசமாய் குறையவே.

அந்நிலையில்,
கூரை வேயாத வீட்டில்
வான மேகம் நொறுங்க
மழைச் சரங்கள் ஜர்ரிட்டதுபோல்
லண்டன் நகர் மீது
ஓராயிரம் வெடி விமானங்கள்
படை எடுப்பாய் பறந்துவந்து
குண்டுக்கனல் கொட்டிடவே
மதலை முதல் முதியோர் வரை
உயிர்துடித்துக் கரியாகக் கண்டு
துடித்துச் செத்த உயிர்களுக்காக
உதிரக்கண்ணீர் பெருக்கினாய்.
'லண்டன் அழிந்து சுதந்திரம் வேண்டா
என்று உலகம் கேட்கச் சொன்னாய்.

'தின்ன வரும் புலிதன்னையும்
சிந்தையில் போற்றி'னவனாய்
'பகைநடுவில் அன்புருவான நம்
பரமன் வாழ்'வதைக் கண்டவனாய்
'பகைவனுக்கு அருள்வாய் 'மனதினாய்
நீ சொன்ன மனிதாபிமான சொற்கள்
தைக்காத
மரத்த
மற உள்ளம்!
வெற்றி வழி மமதையில்
மதிக்காத பார்வை!
யுத்தம் முடியவும்
உனக்கு சுதந்திரம் என்று,
காட்டிய இரக்கத்துக்கு நன்றியாய்
ஒரு வார்த்தை சொல்லவில்லை.

## 5

இரண்டாண்டு பொறுத்திருந்தாய்
ஏகாதிபத்ய வெற்றித்திமிர்
ஏறுவதையும் கண்டாய்
வெகுண்டு நாண் ஏற்றினாய்
'வெள்ளையனே வெளியேறு'
என முழங்குவேன் என்று
ஒரு இரவு சொன்னாய்,
மறுகாலைப் பொழுதில்
உன் இடத்தில் நீ இல்லை.
உன்னைச் சேர்ந்தோர்
அத்தனையும் இல்லை.
நீ வாயசைக்கவும் பாய இருந்த
தளபதிகளில் ஒருவரேனும் இல்லை.
கூண்டோடு கைலாசம் போனதுபோல்.

என்னவோ ஏதோ என
கிளர்ந்து எழுந்தது பாரதம்.
போர்க்களத்தில்
படைத்தலைவனை இழந்து
முன் பின் பாதை புரியாது
தவிக்கும் சேனையின் தவிப்பு
பொது மக்களிடையே கொந்தளிப்பு
தந்திக்கம்பி அறுப்பு
கச்சேரிகள் தீ வைப்பு
தண்டவாளங்கள் பெயர்ப்பு
இவையும் இன்னும் பலவும்
உன்போர்வழி மறுப்பு
என்பது உன் பின்தீர்ப்பு.
உண்மைதான் என்றாலும்
உணர்ச்சி வெறியில்
ஆவேசநிலையில் இது மறப்பு
உன்வழி மறுப்பல்ல என்று
சற்று தடம் புரண்டோர்
பின் சமாளிப்பு, சால்ஜாப்பு.

இது இருக்க
'சண்டி முண்டினால்
கொட்டம் தாங்காது'
நாற்பது கோடி முண்டிய பிறகு
பிரிட்டிஷ் ஆதிக்கம் தாங்காது.
எனவே, கைவரிசை அத்தனையும்
காட்டியது அதிகாரம்.
நாசவேலை, சதி என்றெல்லாம்
பழிபோட்டு, வதந்தி பரப்பி
கட்டவிழ்த்து விட்டது அடக்குமுறையை.
ஆனாலோ,
அடக்க முடியாத சிங்கம்-என
ஆக்ரோஷமாக இருந்தது பாரதம்.

## 6

போரும் முடிந்தது
புதிய இஸம்கள் பொசுங்கின
பழய இஸம்கள் தப்பின
என்றாலும்
புதுவெள்ளம் பழயதை
அடித்துச்சென்ற கதையாக
பழய இஸம்களும் ஆட்டம் கண்டன.
'டவுன் வித் இம்பீரியலிஸம்'-
இதுவரை போட்ட கோஷம்
இன்று அது சரிந்தது நிதர்சனம்.
சாயும் இம்பீரியலிஸம்
கைவரிசை இனி செல்லாதென
இந்தியாவை கைகழுவ முடிவு செய்து
உன்னை அழைத்து பேரம் பேசி
உன் நிபந்தனைக்குச் செவி சாய்க்க
வெள்ளோட்ட சுதந்திர ஆட்சிக்கு
வழி செய்துவிட்டாய்.

எலி-தவளை கயிற்று உறவாக
இனம் பிரிந்த மந்திரி சபையாக
எதிர் எதிர் இழுக்கும் போக்காக
சுதந்திர ஆட்சி நடை பயிலுகையில்
தான் போவது உறுதி ஆனாலும்
தன் சுவடு அழியாதிருக்க
ரவி மங்கும் சாம்ராஜ்யம்
அயர்லாந்து அல்ஸ்டர் பிரித்த
பிரித்தாளும் சூழ்ச்சி வழியில்,
மேற்கத்திய சாணக்யம்
ஜர்மனி, வியட்நாம், கொரியா, சீனா
இரண்டு படுத்தி
ஆளுக்கு ஒரு கூறு பிரித்து
தன் வழிப் பொருளாதார
தத்துவ ஊசி போட்டு,
சரித்திரம் கண்ட நாள் முதலாக
ஓரினமாக வாழ்ந்து வந்தோர்
ஒருவருக்கு மற்றவர் விரோதி ஆக
படையெடுத்து, ஆட்சி அழித்து
வெறிகொண்டு உயிர் அழித்து
உயிரையும் அழித்துக் கொள்வதை,
எட்டி நின்று தூபம் போட்டு
வேடிக்கை பார்ப்பது போல்,
எம்மதத்தினர் ஆண்டாலும்
கொடுமை எதிர்த்ததன்றி
இனத்துக்காக எதிர்க்காமல்
இந்து, பௌத்த, சமண,
முஸ்லீம், கிருஸ்தவ அரசுகள்
பலதைப் பார்த்த பாரதத்தை
மத, இன அடிப்படையில் பிரித்து
இந்தியா-பாகிஸ்தான் எனப்பிரிக்க
முடிந்து போட்ட சிக்கலைக்கண்டு
பதறி மனம் நீ நொந்துபோனாய்
கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதென.
இந்தியா துண்டாடி
சுதந்திரம் வேண்டாம் என்றாய்.

ஆனால், வெள்ளோட்ட சுயாட்சி நடக்கையில்
வெறியாட்டம் கண்டது பாரதம்.
பிரிவினை விஷ விதை முளைவிட்டு
செடியாய், மரமாய் வளர்ந்தது.
காட்டு மனிதனை
கட்டவிழ்ந்த புலியாக
அண்டை வீட்டுக்கு
அண்டை வீடு எதிரியாக
ஒருவனுக்கு மற்றவன் எதிரியாக
ஓரினம் என்பது மறந்து
கடவுள் மறந்து
கலாசாரம் மறந்து
அறிவு இழந்து
அன்பு உதறி
மாஸகர், ரேப், லூட்டிங், ஆர்சன்
கோடிக்கணக்கில் சொத்து சூறை
லட்சக்கணக்கில் மனித அலறல்
பதினாயிரக்கணக்கில் வீடுகள் தீக்கிரை
ஆயிரக்கணக்கில் உடல்கள் சிதைவு
நூற்றுக்கணக்கில் கற்பு அழிப்பு
வங்கமும் பாஞ்சாலமும்
ரணகளப் பட்டது கண்டாய்.

குடல் பதறினாய்
இதுவா சுதந்திரம்
இதுக்கா சுதந்திரம்
என்று குலைநடுங்க குமுறினாய்
நவகாளி ஓலக் குரல் கேட்டு
ஆதிமூலமாய் ஆறுதலுக்கு ஓடினாய்.
புண்பட்ட உள்ளங்களின்
குறைபட்ட அங்கங்களின்
சுற்றம் இழந்த அனாதைகளின்
கற்பிழந்த சீதைகளின்
துயர் தீர்க்க முடியாதானாலும்
மனமுறிவு தவிர்க்கும் சொல்லை
ராமநாம மந்திரத்தை
பற்றுக்கோலாய் நம்பச்சொல்லி
எதிர்கால வாழ்வு நம்பிக்கை ஊட்டி
எதிரிக்கும் அன்பு காட்டச் செய்து
அமைதிமனப்படுத்தி திருப்பினாய்.

## 7

ஆனால்,
மழைவிட்டும் தூவானம் விடவில்லை
தூவானமே மீண்டும் மழையாகலாம்
தொல்லை விடாது என்று கண்டு
உன்னவர் சிலர்
'பிராக்டிகல்' பின்பற்றிகள்
'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்'
நியாயம் பேசி
வாய்ப்பு இழக்க மனம் இன்றி
கடும்விலை கொடுத்தாலும்
சுதந்திரம் கிடைத்தால் போதும்
என உன்னுடன் வாதாடி மன்றாட.
நீயும் அவர்கள் தாபம் மதித்து
என் நெஞ்சுக்கு ஏற்காவிட்டாலும்
உங்கள் நெஞ்சுக்காக ஏற்கிறேன்
என பேரம் பேசி முடித்து
உன் லட்சிய சிதைவையும்
தாங்கிக் கொண்டாய்,

நாடும் துண்டாச்சு
வேதம், இதிகாசம், காவியம்
வரலாறு கண்ட நாள் முதலாக
ஆப்கன் எல்லை முதல்
இலங்கை எல்லை வரை
பாரசிக எல்லை முதல்
பர்மிய எல்லை வரை
ஒருருவாக இருந்த பாரதம்
இரு வேறு உருவாச்சு
பிரிந்து போன உருவுக்கு
பேர் புதுசாச்சு
ஒரு கண்ணை விற்று
சித்திரம் வாங்கியாச்சு
வாங்கிய சித்திரமும்
மூளியாய் உறுத்தலாச்சு
உறவு அறுந்தாச்சு
உள்ளம் வேறாச்சு
இனமாக பிரிந்தாச்சு
நட்பு முறிந்தாச்சு
துவேஷ வெறி ஏறலாச்சு.

கண்ணுக்கு பதில் கண் என
சூட்டுக் கோல் எடுத்து
குத்தக் கண்டு
கல்கத்தா ஓடினாய்.
'வெறியால் உடல் மாயும்
உள்ளத்தை மாய்க்க முடியாது'
பகையைப் பகையால் வெல்ல முடியாது
அப்போதைக்கு வென்றாலும்
அது நிலைக்கவும் செய்யாது.
துவேஷத்துக்கு மாற்று துவேஷம் இல்லை
பழிக்குப் பழி மருந்து இல்லை
துவேஷியிடமும் அன்பு செலுத்து
என தார்மீகம் இடித்துரைத்தாய்
உன் வெறி அடங்கும் வரை
உண்ணாவிரதம் இருப்பேன்-என
உன்னை வேள்விக்கு அர்ப்பணித்தாய்
வெறியாட்டம் நின்றது அப்போதைக்கு
உன் நோம்பும் நின்றது தற்போதைக்கு.

நிரந்தரமாய் துவேஷம் நீங்க
மீண்டும் ஒரு முறை
உன் வாழ்வில் கடைசி முறை
காளிங்கனை துவைத்த கண்ணனாக
வெறி அடக்கி வெற்றி பெற்றாய்.

ஆனாலும்
பெற்ற சுதந்திரத்தில் உனக்குத் திருப்தி இல்லை
கொண்டாட்டத்தில் கலக்க உனக்கு மனம் இல்லை
கோலாகலத் தலைநகருக்கு வரவே இல்லை
உன்னவர்கள் அழைத்தும் மறுத்து விட்டாய்
துன்புற்றவர்களே உன்னவர்கள் எனக் கருதினாய்
சுதந்திரதினத்தன்று
பாயசம் வைத்து
நாடே மகிழ்ச்சியில் மூழ்கி இருக்கையில்
அன்றைக்கு உபவாசம் இருந்தாய்

## 8

சுதந்திரம் பெற்றாச்சு-என்றாலும்
உன் வழி மறந்தாச்சு-என்று
உன் மனம் நோகலாச்சு
ராட்டையின் தத்துவம் மறந்து
நூற்பு வேள்விக் கடமை மறந்து
சத்யம் மறந்து
அகிம்சை மறந்து
பற்றற்ற தன்மை மறந்து
வெற்றி மார்க்கத் திறவு கோல் மறந்து
போர் முறை தத்துவம் மாற்றி

குறுக்கு வழி தேர்ந்து
உணர்ச்சி வெறி ஏறி
உதிரத்துக்கு பறப்பேரைக் கண்டாய்
சத்யாக்ரகக் களை போய்
துராக்ரக மேகம் படர
பேச்சில் அனல் தெறிக்க
மூச்சிலே கனல் வீச
செய்கையில் தணல் எறிந்து
ஆக்க வழியை விட
அழிப்பு வழி ருசித்து
தடியெடுத்தவன் எல்லாம்
தண்டல்காரன் ஆகக் கண்டாய்.
நீ வாழ்ந்த நாளெல்லாம்
விழலுக்கு நீர் ஆகுமோ என
கொல்லாமையால் பெற்ற வெற்றி
கொலைக்குப் பயன்படவா என
மனம் புழுங்கி ஏங்கினாய்.

ஆநந்த சுதந்திரம் பெற்று விட்ட போதையில்
ஆளும் பதவிக்கு ஆசைப்போட்டி இட்டு
அதிகார மோகம் தலைதூக்கக் கண்டாய்
உன்னைச் சுற்றி வலம் வந்தோர் அத்தனையும்
உதட்டில் ஒன்றும் உதரத்தில் ஒன்றுமாக
சமயத்துக்கு உபயோகித்து
சந்தர்ப்பத்துக்கு காத்திருந்து
வாய்ப்பு கிடைத்ததும்
வாய்மையை நழுவ விட்டு
கை உரம் பெற்றதும்
அகிம்சையை உதறி விட்டு
வாய்மையும் கொல்லாமையும்
பத்தாம் பசலி மதிப்புகள் என
முணுமுணுக்கும் நெஞ்சம் கண்டாய்.
நீ கனவு கண்ட ராமராஜ்ய சமுதாயம்
கனவாகவே இருக்கும் என எள்ளி
மேற்கே குரல் கேட்ட சோஷலிஸ சமுதாயம்
நனவாக முடியும் என உன்னி
உன் வாரிசென நீ பட்டம் சூட்டியவனே
உனக்கு மாறான குரல் எழுப்பக் கேட்டாய்.
ராமநாமம் பரிகசித்து
மார்க்ஸ் நாம கோஷமிடும்
கோஷ்டி ஒன்றும் உருவாகக் கண்டாய்.

உழைப்புக்கும் முதலீட்டுக்கும்
தர்மகர்த்தா அடிப்படையில் உறவு
என்ற உன் பொருளாதார தத்துவம்
எவர் காதிலும் ஏறவில்லை
உழைப்புக்கு முதலீடு விரோதி
முதலீட்டுக்கு உழைப்பு அடிமை
வர்க்க பேதம் தவிர்க்க முடியாதது
என்பதே நெஞ்சில் முடிவானது.

## 9

சுயதேவை பூர்த்திக்கு
குடிசைத் தொழிலே உயிர்நாடி,
ராட்டை வெறும் சின்ன மன்று
அறுபது கோடிரூபாய் அன்ய ஆடையை
சுட்டெரிக்கும் அக்னி அஸ்திரம் மட்டுமில்லை
வயிறு பசித்தோருக்கு உணவு அளிக்கும்
அட்சய பாத்திரம் மட்டும் இல்லை
சர்க்காவின் ரீங்காரத்தில்
கிடைப்பது மன அமைதி
நூற்பதால் ஒருநிலைப்படு மனம்
மன அடக்கம் உணர்ச்சியை அடக்கும்.
சிந்தனையைக் கிளறும் சிறந்த கதிர்
அன்பை சுழற்றும் போர்க்கள திகிரி
தார்மீகப்பண்பு போதிக்கும் நூல்
தன் மானம் காத்திடும் தற்காப்பு ஆடை
மனிதாபிமான ஓசை எழுப்பும் முரசு
லோகோத்தாரணத்துக்கு வரப்ரசாதம்
என்ற உன் கணிப்பெல்லாம் மறந்து
எளிய வாழ்வின் திருப்தி துறந்து
எங்கேயோ யார்யாரோ
தம் வசதிக் கென தோற்றிய
ஆடம்பரம் தனதாக்கிக் கொண்டு
'லக்ஷரி' பொருள்களின்
மேல் மினுக்கில் மயங்கி,
போக ஆசை தேவையை கூட்ட
தேவை உற்பத்திப் பெருக்கை தூண்ட
உற்பத்திப் பெருக்கு பேராசை ஏறி
மேனாட்டு முழுவேக யந்திரம் கண்டு
கொள்ளைத் தேவைக்கு
அதுவே சாதனம் என
யந்திர மோகத்தில்
ஆழ்வதைக் கண்டாய்.

சுகவாழ்வுக்கு அடிகோலும்--மிஷின்கள்
அவசியமே என்றாய் நீ—ஆனாலும்
சுரண்டும் ராக்ஷஸ ஆலைகளால்
அவல மாகும் மக்கள் வாழ்வு என்றாய்.
அங்கொரு மூலையில் மூலதனம் குவியும்
இங்கொரு மூலையில் உழைப்பு குவியும்
குவிந்த மூலதனம்
உழைப்பை உதாசீனப் படுத்தும்
வெகுண்ட உழைப்பு
மூலதனத்தை எதிர்க்கும்
முதல் மமதை பேசும்
தொழில் உரிமை பேசும்
முதல் லாபத்தை முன் வைக்கும்
தொழில் கூலியை முன் வைக்கும்
முதலாளி தொழிலாளி வர்க்கம் பிரியும்
போட்டியும் குரோதமும் ஏறும்
போர்க்களம் ஆகும்
என்று நீ அன்றே எச்சரித்தும்
வானுக்குப் புகை எழுப்பும்
கனரக ஆலைகளுக்கு
அடிகோலப்படுவதையும் பார்த்தாய்.

மதம்பேசி இனம்பேசி மொழிபேசி
தனிப்பண்பு பெருமை பேசி
மத இன மொழி வளர்ச்சிக்கென
தமக்கென அமைப்புகள் விரும்பி

வகுப்புவாத தூபம் போடும்
சங்கங்களும் உருவாகிப் பெருகக் கண்டாய்.
'தருமமே அரசியல் அதனிலும்
பிற இயல் அதனிலும்
முற்றும் வெற்றி தரும்' என
நீ பேணி வளர்த்த தத்துவம்
நாட்டின் கைப்பிடி நழுவக்கண்டாய்.
சத்தியமும் அகிம்சையும்
என்பது மாறி
அமைதியும் நியாயமானதும்
என்ற போதே
உன்வழி கைவிடப்பட்டதென
உணர்ந்த நீ
அமைதியும் போய்
நியாயமும் போகும் நாட்களை
கண் முன்னே யூகித்தாய்.
சுற்றம் இழந்து
சூழ்நிலை மாறிவிட்ட களத்தில்
தனியொருவனாக
ஆகிவிட்ட உணர்வுடன்
உள்ளம் வெதும்பினாய்
உடலும் சோர்ந்தாய்,
இதுதான் சுதந்திரம் என்பதானால்
ஆண்டவனே கதி என
எதிர்காலத்தை அவனுக்கு அர்ப்பணித்தாய்.

## 10

உன் நாற்பதாண்டுப் பொதுவாழ்வு
உலகின்முன் நினைவு விரித்து
சாதனை வடித்துக் கிடக்கிறது
கறுப்புக்கண்டத்து
கறுப்பர் மானம் காக்க
கைரேகைப் பதிவுக்கு எதிராய்
கடும் கிளர்ச்சி இயக்கம் நடத்தி
காவல், தண்டனை முதல்நாள் முதல்
பாரத விடுதலைப் போர்க்களத்தில்
முப்பதாண்டு போர்க்காலத்தில்
கம்பிக்குப்பின் நீ கழித்த
இன்னல் நாட்கள் எத்தனை !

சகஊழியர் நெறி தவற
'பொனிக்ஸ்'ல் ஏற்ற உபவாசம் முதல்
தன் தவறை உணர்ந்தாலும்
பிறர் தவறு கண்டாலும்
பிராயச்சித்தமாக
ஆத்ம சுத்திக்காக
மனிதாபிமானத்துக்காக
உயிரைப் பணயம் வைத்த
உபவாச நாட்கள் எத்தனை !

நெறி வாழ்வு முறை பயில
சத்யாக்ரக பயிற்சி பெற
பொனிக்ஸ் காலனி முதல்
சேவாக்ராமம் வரை
நீ நிறுவிய ஆசிரமங்கள் எத்தனை !

உரிமைப்போர் துணிவு கண்டு
டர்பன் நகர வெள்ளையர்கள்
உன்னைக் கொல்ல முயன்றது முதல்
வெள்ளையன் பட்டாணியன் சனாதனி
சமஸ்தான கோஷ்டி, முஸ்லீம், இந்து
உன் உயிர் பறிக்க
செய்த முயற்சிகள் எத்தனை !

நிர்மாணத் திட்டமே
நல்வாழ்வுக்கு வழி என
நீ நிறுவிய ஸ்தாபனங்கள் எத்தனை !

உன் தத்துவம் பரப்ப
பொதுமக்கள் தொடர்பு கொள்ள
நீ செய்தி சொன்ன
பத்திரிகைகள் எத்தனை !

தனியொரு மனிதனாய்
தனித்த ஒரு கொள்கையனாய்
தார்மீகம் பரப்பவும்
தன்னரசு பெறவும்
துணை நீ சேர்த்த
வைரம் பாய்ந்த
போர் முனை தளபதிகள் எத்தனை !

'கல்லை வயிரமணி ஆக்கல்' போல
உன் ஒலி கேட்டு ஒளி பார்த்து
உத்வேகம் ஏறி உள்ளொளி பெற்ற
போராட்டத் தொண்டர்கள் எத்தனை !

இவை அத்தனையும் இன்று
அன்று கண் தின்றதை
இன்று வாய் அசைபோடும் பழய நினைவுகள்
இப்படியும் ஒருவன் இருந்தானா—என
மகாத்மா பட்டப் பரிசு கொடுத்து
எழுப்பிய சிலை வணக்கத்துக்கு சான்றுகள்
சூபர்மன் வரலாற்றுக் காவியத்துக்கான
காதை, காண்ட, படலக்காட்சிகள்

## 11

பாரதத்தின் எதிர் காலத்தை
அவனுக்கு அர்ப்பணித்தாய்
உன்னையே அவனுக்கு
உடன் அர்ப்பணிப்பாய் என
ஒரு கணம் யாரும் நினைத்தோமா ?

சுதந்திரம் பெற அன்று
லஜபதி களபலி
சுதந்திரம் பெற்ற அன்று
நீயே களபலி

அன்று 1948
ஜனவரி முப்பது
அதுக்கு முன்னாள் கடிதம் ஒன்றில்

'நேற்று இருந்தது ஆத்மா
இன்று இருக்கு, நாளையும் இருக்கும்
அதைத்தாங்கிய உடல்தான்
இன்று வீழ்ந்து விட்டது-என
யார் மரணம் குறித்தோ
யாருக்கோ நீ எழுதியது
மறுநாள் உனக்கே அது நடக்கும் என
நீ முன் கண்டு சொன்ன சொற்களா ?

அதுக்கும் பல ஆண்டுகள் முன்
ஒன்று தூக்குமேடை
அல்லது துப்பாக்கி குண்டு
இரண்டில் ஒன்ருல் என் சாவு
வீரமரணம் அதுதான் என
யாரிடமோ நீ சொன்னதும்
அன்றே அறிந்து சொன்னதா ?
என் உயிர் வேண்டுபவனுக்கு
பிரார்த்தனைக் கூட்டமே தக்க இடம்
அதுவே தக்க சமயம்-என்று
உன் சர்தாரிடம் சொன்னது
தீர்க்கதரிசனமாகச் சொன்னதா ?
எப்படியோ—

அன்று ஜனவரி முப்பது
அதுக்கு முன்னுள் பிரார்த்தனையில்
இமயத்தின் அமைதியை நான்
அநுபவிக்க விரும்பவில்லை
சூழ்ந்துள்ள குழப்பத்திருந்து
கிடைக்கும் எவ்வித அமைதியும்
திருப்தி தரும் எனக்கு
உங்களிடையே இருப்பதிலே
என் உள்ளம் கொள்ளும் ஆறுதல்,
இடுக்கண் உற்ற மனிதனுக்கு
இன்பம் அளிப்பது உழைப்பே
நேர்முகமோ மறைமுகமோ
பலாத்காரம் அசுத்தமானது
மேற்கிலும் கிழக்கிலும் அதிகாரப்பித்து
பாரதம் தப்புமா என திகைக்கிறேன்
தன்னடக்கம் என் கண் முன்னே
குலைவதைப் பார்க்கிறேன்
என் முன் உள்ள ஒரே வழி
இருதயத்தின் அடி ஆழத்தில்
உள்ள ஒளி அறையில்
மனிதனுடன் பேசும் ஆண்டவனின்
ஆக்ஞைப்படி நடப்பதன்றி வேறில்லை
என்று அன்றய நிலைகண்டு
மனம் புழுங்கிச் சொன்னது
மறுநாள் ஆண்டவன் ஆக்ஞை
உன்னை அவனிடம் அழைக்கும்-என
உணர்ந்து சொன்ன வார்த்தைகளா ?

அன்று ஜனவரி முப்பது
அதுக்கு முன்னுல் கடைசி கட்டுரையில்
அகிம்சை கடைப்பிடித்து
அடிமை வாழ்வு ஒழிய
ஆட்சி நமதாச்சு ஆனுல்
மாட்சியான வாழ்வுக்கு
அஸ்திவாரம் இனித்தான்
செல்வ சுபீட்சக் கட்டிடம் எழுப்பி
சமூக சுமுக நிலை மாடி கட்டி
ஆன்மிக ஆதர்ச மேல்மாடி கட்ட
தொலை தூரம் போக வேண்டும்
சித்தியாவதும் சுலபம் இல்லை
உண்மைக்கும் போலிக்கும்
வித்தியாசம் அறிந்து
நிர்மாணத் திட்டத்தை
நாட்டின் சக்தி ஆக்கி
ஊழல், லஞ்சம், பதவியாசை,
சுயநலம் இத்யாதி கணைகள்,
காளான்களுக்குத் தப்பி
குதாய் கித்மத்காரனுக
ஒவ்வொருவனும் தன்னை விட்டு
'நாட்டை நினைப்பாரேல்'
பெற்ற சுதந்திரம் நாள்பட நிலைக்கும்
இல்லையேல் அற்று விழும்
தேசமே அழிந்து விடும்
தூரதிருஷ்டியில் கண்டதை
வாய்விட்டுச் சொல்கிறேன்
ஆண்டவன் அருள் மட்டும்
எனக்குக் கிடைக்குமானுல்
ஊழியம் செய்தே
ஒன்றேகால் நூற்றுண்டு வாழ்வேன்
என்று எழுதிய வரிகள்
உன் கடைசி செய்தியாக
அறிந்து எழுதிய வரிகளா ?

நூருண்டுக்கு மேல்பட்ட வாழ்வும்
தேகதிடமும் போதிய அவகாசமும்
கிடைக்காது என்ற சந்தேகமா ?
ஆண்டவன் அருளமாட்டான் என்ற நினைப்பா?

அன்று ஜனவரி முப்பது
உன் கணக்கு அன்றோடு தீர்ந்ததென
உன் அந்தராத்மா உனக்குச் சொல்லியதோ ?

காலை எழுந்ததும்
பாக்கி உன்னேடு தொடரக் கூடாதென்றே
அன்றையக் கணக்கை அன்றே தீர்த்துவிட
கடிதப் பைசல் செய்து முடித்தாய் ?

மாலை நெருங்கவும்
நீ திருப்பம் விளைவித்து
நீ விரும்பிய விதமாக
வளர்த்து வளர்த்திருந்த காங்கிரஸ்
இனி செய்ய வேண்டியது கணித்து
போராட்டத் தொண்டர் அமைப்பு மாறி
நாட்டு ஊழியர் அமைப்பாக ஆக
திட்டமிட்டுக் குறிப்பெழுதி
அதுவே உன் கடைசி செய்தியாக
பொறுப்புள்ள ஒருவரிடம் கொடுத்தாயே-உன்
பொறுப்புத் தீர்ந்ததென்று கொடுத்தாய் ?-இல்லை
உன் வாரிசுக்குப் பொறுப்புணர்த்தவா ?

அன்று ஜனவரி முப்பது
மாலைமணி ஐந்தாச்சு
ஐநூறுபேர் பிரார்த்தனைக்கு கூடியாச்சு
கடியாரம் பொய்த்தாலும்
உன் குறித்த நேரம் பொய்யாது
என்னவோ ஐந்து நிமிஷ தாமதம்.
ஒருவேளை இன்னும் சில நிமிஷங்கள்
இவ்வுலகில் நீ நடமாட
ஆண்டவன் உனக்கு அளித்த
கிரேஸ் மார்க்கோ ?

பேத்திகள் தோள் கைபோட்டு
பிரார்த்தனை மேடை நோக்கி
வேகநடை போட்டு வந்தாய்.
உனக்கு வழிவிட்ட கூட்டம்
அவனுக்கும் வழி செய்ததாயிற்று
கண்ணிமைப்பு, மின்னல் வீச்சு
நொடிப் பொழுது என்றெல்லாம்
குறைந்த பட்ச நேரத்துக்கு கணக்குண்டு.
அவற்றையும் வகுத்தது போல்
அணுவையும் பிளப்பது போல்
ஆன நேரத்தில்
நடந்தது என்ன என்று
பார்த்த கண்ணுக்கும் தெரியவில்லை
கேட்ட காதுக்கும் புரியவில்லை
'ஹரே ராம்'என நீ சரியவுமே
குண்டு சப்தம் புரிந்தது-உன்
ஆடை சிவந்தது தெரிந்தது
ரத்தம் மண்ணில் சிந்தியது

## 12

ரத்தம் சிந்தா கிளர்ச்சித் தலைவனின்
ரத்தம் விழுந்தது பாரத மண்ணில்,
நியாய பாகம் கொடுக்க மறுத்து
தாயாதிப் போர் நடந்த இடத்தில்—
ரத்தவெள்ள குருக்ஷேத்திர மண்ணில்,
கிரேக்க, ஹூன, முஸ்லீம்
மொகலாய, பிரிட்டிஷ்
ஆதிக்கப்போர் பல நடந்து
மன்னர் பலர் தலைகள்
உருண்ட டில்லி மண்ணில்.

ஆதிக்கம் ஒழிய
நியாய பாகம் கிடைக்க
வாழ்வை அர்ப்பணித்த
உன் ரத்தமும் அங்கே விழுந்து
உறைந்தது.

மனிதவர்க்கம் பூராவுக்குமே
பக்தி காட்ட வேண்டும்
தனியொரு நாகரீகத்துக்கு அல்ல
என்று கடவுள் வாக்கு உரைத்த
கிரேக்க ஞானியின் வாய்க்கு
அருந்தக் கிடைத்தது விஷம்.
ஆத்மாவை இழந்து
உலகத்தை அடைவதில் லாபமில்லை

என்று கடவுளின் ராஜ்யத்தை
காட்ட முயன்ற கடவுளின் புத்திரனுக்கு
மரத்தில் ஆணி அடித்து அறைவு.
அடுத்தவனை உன்னைப்போல் நினை என
மனிதனை மனிதன் விற்பதா என
அடிமை வியாபாரம் ஒழித்த
அமெரிக்கத் தலைமகன் நெஞ்சுக்குள்
பாய்ந்தது துப்பாக்கி குண்டு.
உலகமே தீமை செய்தாலும்
நாம் தீமை செய்யலாமா என
இனவெறி கண்டு வயிறு பதறி-உன்
வெறி அடங்கும் வரை புசியேன்'-என
உயிர்ப்பணயம் வைத்து
உபவாசம் இருந்தவன் வயிற்றை
துளைத்ததும் ரிவால்வர் தோட்டா!

அன்று ஜனவரி முப்பது
மணி ஐந்தடித்து ஆன நிமிஷம் ஐந்து
ஒன்றுகு நாலாய் தோட்டாக்கள்
உன் உடலைத் துளைத்துத் துளைக்கவும்
கால்மடங்கித் தரையில் சரியப்போனாய்
தாங்கிய பேத்திகள் கைத்தாங்கலாய்
உன்னைத் தரையில் உட்கார்த்த
ரத்தம் பீறிட்டு அடிக்கையில்
இமைகளை அமைதியுடன் மூடி
தலைதாழ்த்துக் கரம் குவித்து-உன்
கடைசி பிரார்த்தனையை செலுத்தினாய்.

ஆம், உன் கடைசிப் பிரார்த்தனை அது
நாளை உனக்கு பிரார்த்தனை ஏது ?
ஆண்டவன் அடி சேரப்போகிறவனுக்கு
ஆண்டவனுக்குள் அடங்குபவனுக்கு
ஆண்டவனாகவே ஆக இருந்தவனுக்கு
மறுநாள் பிரார்த்தனை ஏது ?
உனக்கல்லவோ இனி எங்கள் பிரார்த்தனை

மணி ஐந்து அடித்து
ஆன நிமிஷம் நாற்பது
உன் பிரார்த்தனை முடிந்து
இறைவனடி சேருமுன்பு
இடையே இந்த மண்ணில்
இன்னும் இருக்கக் கிடைத்த
நிமிஷங்கள் முப்பத்தைந்து
சுமரணை போனது போல் தோன்றினாய் நீ.

இருக்காது
தியானத்துள் ஆழ்ந்து
ராமன் நினைவிலேயே—
'ரகுபதிராகவ ராஜாராம்
பதீதபாவன சீதாராம்'
உன் கடைசி மூச்சையும் விட்டிருப்பாய்

சோதனைப்புவி வாழ்வு நீங்கினாய்
அமைதி தேவ வாழ்வு அடைந்தாய்
மண்ணுக்கு சடலம் ஆனாய்
வானத்துக்கு அமரன் ஆனாய்.

## 13

'வானத்து அமரன் வந்தான் காண்
வந்தது போல் போனான் காண்'
என்று புலம்பியது பாரதம்
'தன் காலத்து தலை சிறந்த ஆத்மா'—என
சிரம் குவித்து அஞ்சலித்தது மானிடம்
'பூமிக்குத் திரும்பி வந்த யேசு கிருஸ்து'—என
உன்னை அவதார புருஷன் என்றது
மறு பிறப்பு நம்பிக்கை
மறுக்கும் தத்துவ மேற்கு.

தன் கொள்கைக்கும் மேலானவன்
பிரபஞ்சப் பொருளில் ஐக்யமானவன்
அழியாத சத்தியத்தின் பிரதிபலிப்பு
மனித சமூகத்தின் மனச்சாட்சி
என்றும்

மறையும் பண்பாட்டின் தனித் திலங்கி
ஆன்மிக வாழ்வின் செல்வாக்கு உருவம்
சத்யம் அகிம்சை சமாதான சின்னம்
ஆத்ம பலத்தின் நிருபணம்
அகிம்சை கொள்கையின் சுடர்விளக்கு
தெய்வீக ஆதர்சர் பெற்ற துறவி
புத்தன் ஏசுவுக்குப்பின் இவர்தான்
என்றும்

மகான் வாழ்க்கையின் சோக முடிவு
சரித்திரத்தில் பெரிய அத்யாய முடிவு
ஒரு பைத்தியம் திருடிவிட்ட அரும்தனம்
சமாதானலட்சியத்துக்காக பிராணத்யாகம்
மகத்தான சர்வதேச துக்கம்
நல்லவனாக இருப்பதில் எவ்வளவு ஆபத்து
என்றும்

பிரிட்டிஷ் ஆட்சி முடிய வைத்தவன்
இந்திய சுதந்திரத்தின் சிற்பி
இந்து மதத்தின், இந்தியாவின் இதயம்
இந்திய ஐக்யத்துக்கு உயிரை அர்ப்பணித்தவன்
மைத்ரிட்டி வாழ்வுக்கு வாதிட்டவன்
என்றும்

குரோதத்தைவிட அன்பே மேல் என்றவன்
மானிடத்தின் முக்காலத்துக்கும் முதல்வன்
தருத்திர நாராயணனின் நண்பன்
தன்கால ஒப்பற்ற ஆன்மீகத்தலைவன்
வருங்காலம் போற்றும் அவதார புருஷன்
சுயநலம் இன்றி உழைத்த மகான்
விரோதிகளை நேசிக்க முயன்றவன்
உலகின் மாபெரும் ஆன்மீகத்தலைவன்
இந்தியாவின் ஆத்மாவை மீட்டுத் தந்தவன்
என்றும்

எந்த மன்னனும் ஞானியும்
சாதிக்க முடியாத தனிப்பெரும் சாதனை
உலக வரலாறு இழந்த மகான்
ஜீவியத்துக்குப் பின்னும் திகழும் பெரியோன்
நூற்றாண்டின் மகாபுருஷன்
என்றும்—

## 14

என்றெல்லாம் உன்னைப் போற்றி
உன் சாதனை குறித்து
உன் ஆளுமை பற்றி கணித்து
உலகமே உனக்காக துக்கித்ததை
மேலிருந்து நீ பார்த்திருப்பாய்
அஞ்ஞானிகள் என்று நினைத்திருப்பாய்.
என்னை அஸ்தி கரைத்துவிட்டு
என்னைச் சிலையாக்கி விட்டு
ஆண்டுக்கு ஒருநாள்
பிறந்தநாள் கொண்டாடிவிட்டு
இறந்தநாள் நினைத்து விட்டு
ஏதெல்லாமோ செய்யப் போகிறாய்—என
உனக்குள் நினைத்துச் சிரித்திருப்பாய்.

நீ இருக்கும் போதே உன்வழி மறக்கப்பட
நீ இறந்தபின் உன்சொல் நினைவிருக்கும்-என்று
நீ எதிர்பார்த்திருக்கமாட்டாய்-ஆனாலும்
உன்னைப்பற்றி, உன் சாதனை பற்றி
உலகம் சொன்ன அத்தனையும்
உண்மை என்பதானால்
பாரதம் செய்து காட்டட்டும்
என்று நினைத்திருப்பாய்

## 15

நீயும் மறைந்தாச்சு
உன் அஸ்தியும் கரைத்தாச்சு
நெஞ்சு வெடிக்கு மட்டும்
துக்கம் கொண்டாடியாச்சு
தாண்டவமாடும் மிருக உணர்ச்சியின்
சின்னம் உன் படுகொலை
உலகில் அறநெறி அழியும் பீதியை
எழுப்பும் உன் படுகொலை
நவீன நாகரீக மோசநிலை காட்டும்
அறிகுறி உன் படுகொலை
என்றெல்லாம் கசந்தும் பேசியாச்சு

உன் சாம்பலிலிருந்து
எத்தனை மலர்கள் பூக்குமோ—என
நம்பிக்கை தொனியும் காட்டியாச்சு
நீ காட்டிச் சென்ற வழி
ஆணை வைத்து நடப்போம்—என
சூளுரையும் உரைத்தாச்சு

ஆனால் ஆசை அறுபது நாள்
மோகம் முப்பது நாள்
துக்கம் பதிமூன்று நாள்
இன்று இறந்தால்
நாளை இரண்டாம் நாள்

என்று காலம் ஓடும் நாள்
பல தாண்டியாச்சு
இருபது ஆண்டுகள் தாண்டியாச்சு
உன் இருபது பிறந்த தினங்களில்
உன் இருபது இறந்த தினங்களில்
தேசப்பிதா என்றும்
அகிம்சாமூர்த்தி என்றும்
ஆத்ம ஞானி என்றும்
ஆதர்ச புருஷன் என்றும்
பின் தலைமுறைகளுக்கு
பிஞ்சு உள்ளங்களுக்கு
பத்திரிகையில் எழுதியும்
மேடைகளில் பேசியும்
உன்னைப் பற்றி கதை சொல்லியாச்சு
உன் போட்டோவை எங்கும் மாட்டியாச்சு
பட்டி தொட்டி எங்கும் சிலை எழுப்பி ஆச்சு
பாட புத்தகங்களில் பக்கம் ஒதுக்கி ஆச்சு
நீ தகனமான இடம் யாத்திரை ஸ்தலம் ஆச்சு
வரும் வெளிநாட்டுப் பிரமுகர்கள்—உன்
சமாதிக்கு மாலை போடுவது சகஜமாச்சு
உன் எழுத்துக்களை அச்சடித்து பரப்பலாச்சு
நீ பிறந்தநாள் விடுமுறை தினம் ஆச்சு
உன் பெயரில் ஸ்தாபனங்கள் அமைத்தாச்சு
இன்னும் எத்தனையோ செய்தாச்சு

இதெல்லாம் அங்கிருந்து பார்க்கிறாயோ
எங்கிருந்து பார்க்கிறாயோ, எதுவோ,
உனக்குப் பின் இருபது ஆண்டுகள்
குழந்தையை பெற்று விட்டு
தாய் உயிர் போனது போல்
சுதந்திரம் பெற்று விட்டு
நீ உயிர் நீத்துச் சென்றபின்
இருபது ஆண்டுகள்.

## 16

முப்பதாண்டு எதிர்ப்புக்குப்பின்
மூணு கட்டப் போருக்குப்பின்
நாடு விடுதலை பெற்றுச்சு
உன் ஆசியுடன் பதவி ஏற்றுச்சு
ஆட்சி லகான் கைப்பிடித்தாச்சு
நலவாழ்வுக்கு திட்டமிடலாச்சு
உப்புவரி எடுத்தாச்சு
குடிக்கு தடை போட்டாச்சு
கதர் பிரசாரம் மும்முரமாச்சு
தீண்டாதார் குறைகள் கவனத்துக் குள்ளாச்சு
உன் நினைவு சூடாய் இருக்கையில்
உன் வழியை நாடு கடைப்பிடிக்கும் போல்
உன் முப்பதாண்டுக் கனவு நிறைவேறும் போல்
உன்னைத் திருப்திப் படுத்துவது போல்
நிர்மாணத் திட்ட அமுல் கோடி காட்டியாச்சு
ஆனால்... ஆனால்... ஆனால்...

ஆறாண்டு யுத்தம் விளைவித்த
கணக்கடங்கா பொருள் சேதம்
லட்சக்கணக்கான பயிர் நாசம்—
அதனால் மானிடமே நிலை குலைந்து
இத்தனை நாள் மரபும் பண்பும்
மதமும் தத்துவமும் அரசியலமைப்பும்
வர இருக்கும் எதிர்காலத்துக்கு
உத்திரவாதம் தர இயலாமல்
உறுதியற்ற நிகழ் நாளில்
தொங்க வைத்த நிலை கண்டு
திசை திக்குப் புரியாமல்
பரம்பரைப் பழைய நம்பிக்கைப் பிடிகள் தளர.

எந்த மண்ணில் வேர் விட்ட தத்துவமோ
எந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப
உருவான கொள்கையோ
எந்தவித வாழ்வுக்கு ஏற்றதோ
அது நமக்கு மருந்தாகுமா-என
எதைத் தின்றால் பித்தம் தெளியும்-என
கண்ணுக்கு அழகாகப் பட்ட
தூரத்துப் பச்சையை எல்லாம்
நெஞ்சில் வாரி எடுத்து
பரீட்சை செய்து பார்க்கத் துணிந்து
பண்பாட்டு ஆன்மிகத் தடுமாறலில்
முதிர்ந்த சுய வாழ்வு நாடுகளே
சிக்கி இருக்கையில்
பிஞ்சு சுதந்திர பாரதம் மட்டும்
தன்வழி தேர்ந்தெடுத்தல் எளிதா என்ன ?

## 17

இருநூறு ஆண்டுக்கு மேலாக
தன் ஆதிக்கம் என்றைக்கும் நிலைத்திருக்க
அதுக்கு ஆபத்து வராதிருக்க எதுவாய்
தக்கதொரு 'மோஸ்ட் ஒபீடியன்ட்' நிர்வாகமும்
காலத்துக்கு ஒவ்வாத கல்வி முறையும்
நாட்டுச் செல்வம் பெருகச் செய்யாத
நொள்ளைத் தொழில் திட்டமும்
வாழ்வுத்தரம் உயரச் செய்யாத
பிச்சை ஊதிய விநியோகமும்
இத்யாதி...ராஜ்ய பரிபாலனம் பண்ணி
இந்நாட்டு வளம் உறிஞ்சி
தன் நாட்டு வசதி வளர்த்து வந்த
சாம்ராஜ்ய கிழச்சிங்கம்
இனி வயிற்றுக்குக் கிடைக்காது—என்று
இத்தனை ஜீரணித்தது போதும்—என்று
சேமிப்பில் இருப்பதும் தாங்கும்—என்று
உறவு மட்டும் விடாதிருந்தால்
சமயத்துக்கு அது உதவும்—என்று
காமன்வெல்த் உறவை மட்டும்
வரமாகப் பெற்றுக்கொண்டு
உளுத்திருந்த நிர்வாகத்தை
வறண்டிருந்த பொக்கிஷத்தை
ஏறிக்கிடந்த கடன் பளுவை
வருங்கால தன்னுரிமை ஆட்சிக்கு
காணியாட்சியாக வைத்து விட்டு,
உனக்குத் துணை நின்று
இளம் தலைமுறைக்கு லட்சியமாய்
உப்பளப் போர் முதல்
வெள்ளையனே வெளியேறு' வரை
உடலையும் உள்ளத்தையும்
ஊருக்கு அர்ப்பணித்து உழைத்த
உன் வாரிசின் கையில் மாட்டிவிட்டு
கடல் வழியே கப்பலில் வந்தது போல்

வான வழியே விமானத்தில் போனதும்,
நல்ல தொழிலாளி தன் ஆயுதத்தை
பழிக்க மாட்டான் என்பது போல்
கைக்கு வந்ததை
அதிகார முதல்வனாய்
'மேக் தி பெஸ்ட் யூஸ் ஆஃப் இட்' செய்ய
உன் வார்சும் முனைந்திட்டான்.

# 18

காதல் வழிதான் கரடுமுரடானதாகும்
போரின் வழியும் அப்படியேதானே.
நாட்டை உருவாக்குவதும் அதேதான் போலும்.
நாட்டுக்கு எது தேவை என
நல்வாழ்வுக்கு வழி எது என
கைப்பற்றக் கொள்கை எது என
நாட்டின் கொடியை உயர்த்திய நீ
மக்களின் நாடியை அறிந்த நீ
மண்ணின் தன்மையை உணர்ந்த நீ
மனிதாபிமானம் வளர்த்த நீ
மானிடமே உய்ய வழி சொன்ன நீ
இருந்திருந்தால் என்ன செய்திருப்பாயோ?

ராமராஜ்யம் கிராம சுயாட்சி
சுயதேவைப் பூர்த்தி தர்மகாத்தா முறை
இவை உனக்கு மட்டுமே தெரிந்தவைகள்.
நீ வாய்விட்டு விளக்கு முன்பே
திட்டம் வழி வகுக்கு முன்பே
உன் வாய்தான் மவுனமாகி விட்டதே.
நீயா மவுனமானாய்?
உன்னை மவுனமாக்கி விட்டார்கள்.
உன் செய்தி எல்லாம்
உள் மூச்சோடு அடங்கிப் போச்சு
உன் திட்டம் எல்லாம்
உன் உடலோடு எரிந்து போச்சு
உன் லட்சியம் எல்லாம்
உன் அஸ்தியோடு கரைந்து போச்சு
நீ விட்டுச் சென்ற கடைசிக் குறிப்புகள்
யாருக்குமே புரியாமல் போச்சு
உன் அடிப்படைத் தத்துவம் மட்டும்
சூத்திரமாக, மந்திரமாக
நினைவுகளில் நிழலாடி இருக்க
நீ பிதாவான சுதந்திர பாரதம்
நீ அனைத்தை ஆக்கிய சுயாட்சி இந்தியா
செயல்வழி முறைக்கு
திசை தடுமாறியது.

கிழக்கு திசையில் ஒளி எங்கும் இல்லை
கன்ஃபூஷ்யஸை உதறி, புத்தனை உதறி
கம்யூனிஸ அனல் கக்கும் சீன டிராகன்
ஜனநாயகம் பேசி
எகாதிபத்ய வெறி பிடித்து
சர்வாதிகார முக்கூட்டில் சேர்ந்து
இடுப்பு ஒடிந்து அமெரிக்கப் பிடிப்பில்
அடங்கிக் கிடக்கும் ஜப்பான்.
ஏனையவை இந்தியாவை பார்க்க
ஒளிக்கு இந்தியா மேற்கே பார்த்தது.

மேற்கேதான் கண்கூசச் செய்யும்
எத்தனைவித இஸம்கள்!
பொருளாதார இஸம்கள்
தத்துவ இஸம்கள்
இலக்கிய இஸம்கள்!
முடியாட்சி—
ரிபப்ளிக், ஜனநாயகம்
பார்லிமெண்டரி பிரசிடென்ஷியல்—
பாசிசம், நாஜிஸம், பிராங்கோயிஸம்
சோஷலிஸம், கம்யூனிஸம்,
பின் டிடோயிஸம் இப்போது மாவோயிஸம்-
காபிடலிஸம், மார்க்ஸிஸம், லிபரலிஸம்
நிகிலிஸம், எக்ஸிஸ்டென்ஷியலிஸம்
ப்ராய்டிஸம், ஸர்ரியலிஸம் இத்யாதி.

பசித்தவன் இலைமுன் பரிமாறிய உணவாய்
ஆசைகாட்டி இத்தனை இழுக்கையில்
ரிபப்ளிக் அஸ்திவாரம் தேர்ந்தெடுத்து
ஜனநாயக கட்டிடம் எழுப்பி
மந்திரிசபை—ஜனாதிபதி கலப்படப்பாங்காக
பார்லிமெண்டரி தோரணை அமைத்து
பழைய உறவு பச்சாத்தாபத்தில்
பிரிட்டிஷ் காமன்வெல்த் உறுப்பாக ஒப்பி
உலக அந்தஸ்துக்கு உயர்ந்து
ஐ. நா. வில் அங்கமும் பெற்றது.

ஆனால் தனக்சென்று ஒரு தனி இஸமாக
உலகம் கடைப் பிடித்திராத ஒரு தத்துவமாக
உருவாக்கி உலகுக்கு அளிக்க
கிடைத்த வாய்ப்பை நழுவ விட்டு,
காந்தியிஸம் உருவாக்கி
கடைப் பிடிக்கத் தவறி,
வேறேதோ டிரேட் மார்க்குக்கு
துளாவியது பாரதம்.

காபிடலிஸம் ரொம்ப பிற்போக்கு
கம்யூனிஸம் ரொம்ப தீவிரப் போக்கு
சோஷலிஸம் சரியான நடுப்பாங்கு-என
பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக
இரண்டும் கெட்டான் தத்துவம் தேர்ந்து
முதலுக்கு வாலும் உழைப்புக்கு தலையுமாய்
பப்ளிக் செக்டர், பிரைவேட் செக்டர் பிரித்து
எதுக்கு எது ஆதரவு எனப் புரியாமல்
எதனால் நாட்டு வளம் பெருகும்
தேசியச் செல்வம் அதிகமாகும்
வாழ்வு நலம் சிறக்கும்-என்று
இருபதாண்டுக்குக் பின்னும்
இன்னும் நிதானிக்க முடியாமல்
சோஷலிஸ மாயமான் பின்னே
விரட்டிப் போகிறது பாரதம்.

'சோஷலிஸம் இந்த நாட்டுக்கு அசாத்யம்
சமத்துவ சமுதாயத்துக்கு அகிம்சையே
மார்க்கம்,
என்று நீ மறையுமுன் சொன்னது
இப்படி நடக்கும் என எதிர்பார்த்தா?

# 19

ஐந்தாண்டுத் திட்டங்களில்
ஒன்றையும் நீ பார்க்கவில்லை
ஒன்றுக்குப்பின் ஒன்ருக
நான்குக்கு நீண்டு இருக்கு.
ஊற்றுக்கண் அடைக்கும் அளவு
உறிஞ்சி அன்னியன் சென்ற பின்பு
பாரத அன்னையின் முலைக்கண்களில்
பால் துளிர்க்கச் செய்வதென்ருல் ?

மூலதனத்துக்கு எத்தனை கோடி நாணயம்
உழைப்புக்கு எத்தனை லக்ஷம் கைகள்
நிறைவேற்றத்துக்கு எவ்வளவு காலம்
ஆகும் என ராக்ஷஸ திட்டமிட்டு,
கஜானு வற்றிக்கிடக்க
யந்திர, நிதி உதவிக்கு மேற்கே பார்க்க
கருணையோடோ, காக்காய் பிடிக்கவோ
கொடுப்போர் முன்வர
கை நீட்டி நன்றியுடன் வாங்கி
முதல் திட்டம் அனேகமாக நிறைவேற்றம்,
அடுத்தது முக்காலுக்கு இழுத்துப் பிடிக்க
அதுக்கு அடுத்தது அதுக்கும் குறைய
நாலாவது இன்னும் பேப்பர் திட்டம்.
நிறைவேற்ற வேகம் தடைப்பட்டாலும்
திறமைக் குறைவால் தரம் குறைந்தாலும்
திட்டம் பயன்தரவில்லை ஏன
கருமியும் திட்டத் துணியான்.

கனயந்திரங்கள் பல அமைத்து
கன ரக ஆலைகள் பல அமைத்து
இரும்பைக் காய்ச்சி உருக்கி
பொகாரோ, பிலாய்
ரயிலுக்கு சித்தரஞ்சன், பெரம்பூர்
கப்பலுக்கு இந்துஸ்தான் ஷிப் யார்டு
பிளேனுக்கு இந்துஸ்தான் எயர்கிராப்ட்
உரத்துக்கு சிந்திரி, சிமிண்டுக்கு மதுக்கரை
போராயுதங்களுக்கு கிர்க்கி, ஆவடி
அணுசக்தி உற்பத்திக்கு டிராம்பே
வானவெளி ஆராய்ச்சிக்கு தும்பா
கரும்புக்கு, காகிதத்துக்கு, காருக்கு
வாழ்வின் தேவைக்கு இன்றியமையாத
அத்தனையும் உற்பத்தி செய்ய
எத்தனை எத்தனை மில்கள், பாக்டரிகள் !

வானுயர் வெள்ளிப்பனிமலை இறங்கி
வடக்கே கோதுமை கொழிக்க
வற்ருது நீண்டோடும் ஜீவநதிகளின்,
மேற்குத்தொடர்ச்சி மலை இறங்கி
தெற்கே நெல்பரப்பும் ஜீவநதிகளின்
எஞ்சிய நீர் அவ்வளவும்
கடலுக்கு வீணுகப் போவதைத் தடுத்து
காலாந்தரமாக வறண்டு கிடந்த
கணக்கற்ற களர் ஏகராக்கள்
மண் ஈரமாக
களர் புஞ்சை ஆக
புஞ்சை நஞ்சை ஆக
நீர்பாய்ச்ச நீர் தேக்கி
நீர்ப்பொக்கிஷம் பெருக எழுப்பிய
பெரிய சிறிய அணைகள் எத்தனை !

பட்டி தொட்டி எங்கும்
இருள் ஒழித்து ஒளி பரப்பவும்
சிறு விசைகள் வைத்து
கிணற்று நீர் இறைக்கவும்
சிறு மிஷின்கள் ஓட்டி
அங்குள்ள மூலப்பொருள் கொண்டு
சிறு தொழில் பல செய்யவும்
மின்சார சக்தி உற்பத்திக்கு
மின் அணைத் திட்டங்கள் எத்தனை !

ஒற்றையடிப் பாதை எல்லாம்
மாட்டு வண்டிப் பாதை ஆச்சு
மாட்டு வண்டிப்பாதை எல்லாம்
கார் ஓடும் சாலை ஆச்சு
கார் ஓடும் சாலை பல
டிரங்க் ரோடு ஆச்சு.

செம்புழுதி கருமண் ரோடெல்லாம்
கருங்கல் ஜல்லி ரோடாச்சு
கருங்கல் ஜல்லி ரோடெல்லாம்
கரும் தார் பளபளக்கும் சாலை ஆச்சு
இளகும் தார்ரோடுகள் பல
இறுகின கான்கிரீட் ரோடுகள் ஆச்சு

மாட்டு வண்டி குதிரை வண்டி
ஓடின ஊர்க்கெல்லாம்
பஸ், பிளஷர் போக வசதி ஆச்சு
பஸ் போன ஊர் பலதுக்கு
ரயில்வே ஸ்டேஷன் அமைந்தாச்சு
ரயில் ஓடின நகர் பலதுக்கு
விமான தளங்கள் ஏற்பட்டாச்சு
போக்கு வரத்து அதிகமாச்சு
துரிதமாச்சு

கங்கை-காவேரியை இணைக்கவும்
திட்டங்கள் நினைக்கலாச்சு
மூலதனம் பெருகி ஆச்சு
உழைப்புக்கு வாய்ப்பு நிறைய ஆச்சு
ஊதியமும் அதிகரிக்கலாச்சு
வாழ்க்கைத்தரமும் உயரலாச்சு
சராசரி வருமானம்
சதவிகிதம் ஏறியாச்சு
ஓலைக்குடிசை பல ஓட்டு வீடாச்சு
ஓட்டு வீடுகள் காரைக்கட்டிடம் ஆச்சு
காரை வீடுகள் மாடி வீடுகளாச்சு
மாடி வீடுகள் மாடிக்குமேல் மாடி ஆச்சு
வீடு கொள்ளாமல் ஊர்கொள்ளாமல்
நகர் சுற்றுப்புறங்கள் மாறலாச்சு
வயல் காடுகள் மனைகளாச்சு
சி. ஐ. டி. நகர்கள், காலனிகள் முளைக்கலாச்சு

கைத்தொழில்கள் பெருகியாச்சு
இண்டஸ்டிரியல் எஸ்டேட்கள் உண்டாச்சு
தொழிலாளர் குடியிருப்புகள் உருவாச்சு

தொழிலாளர் பெருகி ஆச்சு
தொழிலாளர் சங்கங்களும் பல ஆச்சு
உரிமைக்கும் கூலிக்கும் போராட
கட்டுப்பாடாய் நிற்கவும்
போதிய திடம் கொண்டாச்சு
முதலீடும் அதிகமாச்சு
முதலீட்டுக்கேற்ப பலன் விளைவிக்கவும்
கூலி நிர்ணயம், உற்பத்திச் செலவு
லாப விகிதம் கணக்கிட்டு
மூலதனத்தைக் காப்பாற்றவும்
கடமையை உணர்த்தவும்
முதலாளி சங்கங்கள் அமையலாச்சு

உலக ஜனத்தொகையில்
ஐந்தில் ஒரு பங்கு கொண்டு
உபகண்டம் என்னும் படியாக
பெரும்பரப்பு கொண்டிருந்தும்,
வளர்ச்சி போதுமானது காணுத
ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில்
முக்கியமானதான பாரதம்-இன்று
வளர்ந்துவிட்ட ஒரு நாடென
உலகப் பெரிய நாடுகளும் மதித்து
உறவுக்குப் போட்டி இடும் அளவு
தரம் பெற்று இருப்பது
இன்று காணும் வரலாறு.

'ஈனமான தொழிலே-உங்களுக்கு
இசைவதாகும் போடா'
சொன்ன வன் வாயடைக்க
கப்பல் ஓட்டலானேம்
நாடுகாக்க அறிந்தோம்
சேனையும் முன் நடத்தினேம்
இவை அத்தனையையும் பார்த்த கண்கள்
திட்டம் பயனளிக்கவில்லை என்ருல்
விழிகண் குருடுதான் நிச்சயமாய்.

## 20

சாதனையை உன்னிடம் பெருமை சொல்லி ஆச்சு
வேதனையை உன்னிடம் சொல்லியாக வேண்டும்
சோதனை அவ்வளவு அதிகமாகிப் போச்சு
சாதனையையும் அமுக்கிவிட்டு.

யந்திரத்தின் அசுர சக்தி கண்டு
பிரமித்துப் போய் நின்றவர்கள்
நாட்டையே யந்திரமயமாக்கும்
பேரவாக் கொண்டவர்கள்
ராட்டைத் தத்துவம் மறந்து விட்டார்
கதரை பெயருக்கு அணிந்து கொண்டார்
நாகரீகத் துணிகளில் மோகம் கொண்டார்.
உடையில் டெர்லின் மோகம்
பாண்டத்தில் எவர்சில்வர் மோகம்
சாமான்களில் பிளாஸ்டிக் மோகம்.

கதரும் கைத்தறியும்
சவலைக் குழந்தைகள் ஆயின.
பித்தளையும் செம்பும்
வெண்கலமும், ஈயமும்—இத்யாதி
பத்தாம் பசலி ஆயின.
தலைமுறை தலைமுறையாய்
இவற்றில் கைத்திறன் காட்டி
பக்குவப் பட்ட கைகள்
உழைப்பிழந்து முடமாயின.
பழந் தொழில் விட்டு
தலைமுறையாய் வாழ்ந்த இடம் விட்டு
புதுத் தொழில்கள் தேடி
புது இடம் பெயர்ந்து
புது வாழ்வு கண்டனர் பலர்.

உடைக்கும் உணவுக்கும்
பிறன்கை பார்க்காது
இரண்டுக்கும் வழி செய்யும்
சஞ்சீவியே ராட்டை என்ற,
திரௌபதி மானம் காத்த
கண்ணன் திகிரி போல்
தினக் கூலி பெற்று வாழ்வோரின்
தன்மானம் காக்கும் சக்கரம்-என்ற
உன் அடிப்படை சித்தாந்தம்
கேள்விக் குறியாச்சு
கதிரின் வேகச் சுற்று குறைந்தது
கதர் வெறும் சின்னம் ஆயிற்று
மில் சக்கரவேகம் கூடிற்று
மில் துணிரகம் மலையாய் குவிந்து
மக்கள் மனதை மயக்கியது.

உடையின் கதி இதுவாக
உணவின் கதி வேறுவிதம்.
பெரிய சிறிய அணைபல பெருகியும்
சொட்டு நீர் வீணுகாமல்
செட்டாய் பயிரிட உபயோகித்தும்
மானம் பார்த்த ஏகராக்கள்
லக்ஷக்கணக்கில் சாகுபடிக்கு வந்தும்
புள்ளிக் கணக்கு எடுத்து
இத்தனை கோடி டன்கள் என்று
கோதுமையும் நெல்லும் கணக்குக் காட்டி
உணவுக்கு சுயதேவைப் பூர்த்தி இதோ...
இதோ எட்டப் போகிருேம்
எட்டி விடுவோம், எட்டி விட்டோம்
என்றெல்லாம் தேர்தலுக்குத் தேர்தல்
நப்பாசை காட்டல், உத்தரவாதம்.
மூன்று திட்டங்களுக்குப் பின்னும்
சுயதேவைப் பூர்த்தி இன்றும் கனவு
போகப் போக முன் ஓடும் கானல் நீர்.

கண்டிரோல் ஸ்திரமாக நிலைத்துப் போச்சு
சராசரிக் கணக்கு எடுத்து
வயிற்றுக்கு அளவு நிர்ணயம்
அரிசி எண்ணிக் கொடுக்கா விட்டாலும்
தலைக்கு கிராம் கணக்கில் கிலோ அளவு
சத்தின்றி, சுத்தமின்றி, கலப்படம்
வேறுவேலை மெனக்கிட க்யூவில் நிற்கும் கொக்கு
கல், நெல், கரம்பை போக மீந்த அரிசி
கொதியில் குழைந்து உள்ளடிக்கும்.

வாரத்துக்குப் பெற்றது நடுவாரத்தில் காலி
மீதி நாட்களுக்கு வேறு ஏதேதோ உணவு
ஆரோக்யம் வளராமல் இருப்பதும் கெட்டு
ஏதோ உயிரோடு இருக்க ஆகாரம்
என்ற மனவெறுப்புத் தத்துவம்
ரத்தத்தில் ஊறி மரத்தும் போச்சு

இத்தனையும் கப்பல் கப்பலாய்
கடனுக்குக் கிடைக்கையில் என்றால்
சுயதேவைப் பூர்த்தி எட்டுவது என்றே
பற்றாக்குறையே சிரஞ்சீவி ஆகும்.
இத்தனைக்கும் வயலுக்கு குறைவில்லை
உழைக்க ஆளுக்கும் குறைவில்லை
பின் ஏன் இந்த அவல நிலை?

யந்திரப் பொருள் உற்பத்தி பேரவாவில்
சுக வாழ்வுக்குத் தேவையானது எது
இந்த நாட்டுக்கு வேண்டாதது எது
என பகுத்தறியும் விவேகம் இன்றி
லக்ஷரி பொருள் பலதை
வியாபார நோக்கில் செய்து தள்ளி
மக்களை மயக்கும் விதமாக
விளம்பர பலத்தில் விற்றுத் தள்ளி
பொருள் குவிக்கும் நோக்கே குறிப்பு.

விவசாயப் புரட்சிக்கு வகை செய்யவில்லை
நவீன வழிகளை சரிவரக் கையாள வில்லை
கமர்ஷியல் பயிர்களுக்கு ஊக்கம்
உணவு உற்பத்திக்காரனுக்கு
கூலித்தகராறு, களத்திலே மறியல்
புரொக்யூர்மென்ட், விலைநிர்ணயம்,
எனவே மனத்திடன் அழிவு
விவசாயத்தில் சோர்வு
ஏகராக் கணக்கில் நிலம் ஏறினாலும்
டண், கலக் கணக்கில் விளைச்சல் குறைவு.

பற்றாக்குறைவு
அயல் நாட்டு தான்யத்துக்கு
கப்பரை ஏந்திய வாழ்வு
இருபதாண்டாகியும் இந்த தாழ்வு.

உணவுக்கும் உடைக்கும் இந்த கவலை
அவற்றின் உபயோகம் லௌகீக வாழ்வுக்கு
ஆன்மிக வாழ்வுக்கு?
ஆத்மாவின் தூய்மையை வலியுறுத்தி
வழிகாட்ட வந்தோர் அத்தனைக்கும்
கடுக்காய் கொடுத்து வந்துள்ளது மானிடம்
மேற்குக்கு ஏ. டி. ஒன்னில்
சிலுவையானோன் ஒருவன்
நடுக்கிழக்குக்கு பிறைச்சின்ன
ஒளிவீசும் ஒருவன்
கீழ்க்கோடியில் கன்ஃபியுஷியனிஸம்
நிலை நாட்டிய ஒருவன்
தென் ஆசிய பாரதத்திலோ
வேதகாலம் பிடித்து
இந்த நூற்றாண்டு வரை வந்தால்
நூற்றாண்டுக்கு நூற்றாண்டு
எத்தனை எத்தனை ஆன்மவாதிகள்!
அத்தனைக்கும் கடுக்காய் கொடுத்த
தனிப்பெருமை பாரதத்துக்கு உண்டு
ஆன்மிகப் பரம்பரைப் புகழ் நாட்டுக்கு!

ஆன்மீகம்—அரசியல் பிணைத்தாய் நீ
உனக்குப் பின் இரண்டும் வேறானது
பாரதம் இருகூறாய் பிளந்தது போல்.
அரசியல் வாழ்வுக் கை உயர்ந்தது.
சுதந்திரப் போராட்ட ஸ்தாபனம்
ஒரு ராஜீயக் கட்சிக்கு குறுகியது.
வந்தே மாதரம் கோஷித்து
மணிக்கட்டு முறிய தடியடி தாங்கி
சதயாக்ராகி பிடிவிடாத ராட்டைக் கொடி
கட்சிக் கொடியாக மடங்கியது.

தனியான ஆன்மிகத் துறை
உன் முதல் சத்யாக்ரகி கையில்
சர்வோதய உருவம் கொண்டு
உன் நிஜத்தொண்டர் பலரை
உன் சுவடு அழியா மனம் கொண்டோரை
தனக்கு இழுத்துக் கொண்டு
அவர்களுக்கு ஒரு திசை காட்டியது
ஆனால், அரசியல் கோஷ கூக்குரலில்
சர்வோதயக் குரல் எடுபடவில்லை
ஒரு அப்பாவியின் கவலை
ஆமை நடைத் திட்ட வேலை
கொக்கின் தலைமீது வெண்ணெய் வைத்து
கொக்கைப் பிடிக்கும் காரியம் என எள்ளி
அனுதாபத்தோடு ஒதுக்கியாச்சு

அதிகாரத்தில் நம்பிக்கை வைத்து
சட்டங்களுக்கு மக்கள்
கீழ்ப்படிய வைத்து
நிர்வாகம் நடத்துவதே குறியாச்சு
நிர்வாகத்தினருக்கே சகலமும் தெரியும்
பாமர மக்களுக்கு எது என்ன தெரியும்
என்று இறுமாப்பு பேசி
ஓட்டுக்குப் பாமரமக்கள்
அதிகாரத்துக்கு நாமே யஜமானர்கள்... என
ஜனநாயக எதேச்சாதிகார தொனியில்
சவுகர்யத்துக்கு ஏற்ப
அரசியல் சாசனம் திருத்தி
சமயத்துக்கு இசைய
வரிகள், திட்டங்கள் கூட்டிக் குறைத்து
செலவு வரவை சமாளிக்கப் பார்த்து
இரு முனைகளும் சந்திக்க இயலாமல்
கடன் அள்ளிக் கொடுக்க ஆள் இருக்க
கைநீட்டி வாங்கத் தயங்காமல்
காலட்சேபம் நடக்கலாச்சு

காசே குறியென தனி மனிதனுக்கும்
மேம்மன் பக்தி பெருகலாச்சு
தார்மீக நோக்கு சிதறலாச்சு
'பங்கீட்டுக் கடைகளால்
பணக்காரன் ஆனால்
பாவம் என்று ஏதேதோ பேப்பரில் வந்தன

பாவம் ஒன்றில்லா விட்டால் பாருண்டோ
பசியுண்டா'—என
நியாயம் பேசிய
பெட்டிக்கடை நாரணனுக மாறி
லாபத்தில் கொள்ளையாவது
கொள்ளை முதல் போட்டால்
கொள்ளை லாபம் கூடாதா ?
லாபத்துக்கு என்ன உச்சவரம்பு உண்டா
சம்பளத்துக்குத்தான் உச்சவரம்பு—என
பில் படி விலை ஒன்று
பில் இல்லாதபடி விலை ஒன்று—என
முதலாளி வர்க்கம் ஆத்மா இழந்து
பணத்தை எப்படியெல்லாமோ
பதுக்கலாச்சு

'வயிற்றுக்காய் வேலை என்றுல்
நெஞ்சில் பிசாசுத்தலை ஆட'
முதலாளி வர்க்க லாபக் கொள்ளையில்
தன் பங்கை தண்டிக் கேட்டு
தொழிலாளி வர்க்கம் உரிமைக் குரல் எழுப்பி
சலுகை, சம்பள பெருக்கங்கள் கோரி
வேலை நிறுத்தம் :கோ-ஸ்லோ, :கேரோ.
கட்டுப்பாடு செய்து கலாட்டா செய்து
கடமையை பின்னுக்குத் தள்ளியாச்சு

இரண்டுக்கும் நடுவே
வெறும் வாக்கு உரிமையும்
முதல் தேதி சம்பள முதலும்
முப்பதுநாள் வேலை நேர உழைப்பும் கொண்ட
அப்பாவி பாமர மனிதன் நிலை
அம்மானைப் பந்து படும் பாடாச்சு
பங்கு பிரிக்கும் போராட்டத்தில்
அவன் பங்கை மறந்து விட்டார்
அவன் பங்கிலேயே கை வைத்தார் !
ஒருவருக்கு லாபம் ஏற்றம்
ஒருவருக்கு கூலி சம்பளம் ஏற்றம்
மூன்றுமவனுக்கு வரிச் சுமையும்
விலைவாசியும் ஏற்றம்.

நியாய லாபமும்
நியாய ஊதியமும்
நியாய விலையும்
முக்கூட்டாய் அமையச்செய்யும்
உன் தர்மகர்த்தா திட்டம்......?

முதலாளி தொழிலாளி வர்க்க உறவு
கசப்பின் அடிப்படையில்
இன்று போர்க்களம் ஆச்சு
தொழில்கள் ஸ்தம்பிக்கலாச்சு
உற்பத்தி குறையலாச்சு
ஆலைகள் மூடலாச்சு
ஸ்டிரைக், லாக்அவுட், குளோஷர்.
கோஷங்கள் கண்ட மேனிக்கு ஆச்சு
'வாழ்க போய் ஒழிக' கத்தலாச்சு
கல்லை மானுங்கணியாய் வீசலாச்சு
ஆத்திரம் ஓரிடம், பழிவாங்கல் வேறிடம்
பஸ், ரயில். ஆபீஸ் தாக்குதல், எரித்தல்
அதிகாரிகளை தாக்கி அடித்தல், அடைத்தல்

இத்தனையும் இன்று நடப்பது வரலாறு

மேடை தோறும் உன் பெயர் சொல்லி
சத்யம் அகிம்சை போதனை
இன்னெரு பெயர் சொல்லி
மனிதாபிமானம், உலக சகோதரத்வம் போதனை
மூன்றும் பெயர் சொல்லி
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போதனை
இவ்வளவு தார்மீக பிரஸ்தாபமும்
உதட்டுக்கு வெளியேதானே என
சந்தேகம் எழும்படி இருக்கு.

பலதுறை வாழ்வும் குழம்பிக் கிடக்கையில்
மாணவர் உலகம் மட்டும் தப்புமா இதுக்கு ?
எதிர்கால வாழ்வுக்கு வகைசெய்ய
அறிவும் ஆற்றலும் பெறச்செய்ய
பெற்றவன் பள்ளிக்கு அனுப்பிய பிள்ளை
யாராரோ எதெதோ உணர்ச்சி ஊட்ட
அரசியல் கோஷங்களை தனதாக்கிக்கொண்டு
பெரும் பிரச்னைகளை பெரியோர் கை பிடுங்கி
குளிக்கப்போய் சேற்றை
பூசிக்கொண்டவன் கதையாக
தட்டாரப் பூச்சியின் வாலில்
ஊசிகுத்தி விளையாடுவது போல்
கூட்டமாய்ச் சேர்ந்த உற்சாகத்தில்
கொம்மாளம் இட்டு கோரச் சேதம்
நாடு பூராவும் விளைவிப்பது சகஜம்
விவரம் அறியாத பிஞ்சுமனம்
விளைவு யூகிக்க இயலாத பேதைமனம்

பிஞ்சு உள்ளங்களை, பின்நின்று
சூஸ்திரக் கயிறு இழுத்து
ஆட்டி வைக்கும் அரசியல்வாதி
முன்வந்து உதட்டுபதேசம் செய்கிறுன்
உன் பெயர் சொல்லி, மாணவரை அன்று
நீ பயன்படுத்தவில்லையா என்கிறுன்
நீதான் திரும்ப வந்து
இதுக்கு பதில் சொல்லவேண்டும்
அதைவிளக்க இங்கு யாருமில்லை
இருந்தாலும் உரமாய்ச் சொல்ல முன்வரவில்லை
சொன்னுலும் கேட்க யாரும் தயார் இல்லை
படிக்கும் சிறுபையனை போராட்டத்தில் ஈடுபட
நீ சொன்னதாக ஒரு வரி கிடையாது
கலாசாலைப் படிப்பு உதறி
நாட்டுக்கு உன்னை அர்ப்பணித்துக்கொள்
அதுவும் பெற்றோர் அநுமதிபெற்று
என்று அழுத்தினது யாருக்கும் நினைவில்லை
மாணவ உலகம் இன்று கலங்கிய குளம்
ஏன், பாரதமே குழம்பிய களம்

'நெஞ்சில் உரமும் இன்றி'
'பேதைகள் போல் உயிரைப்பேணி
ஆவி பெரிதென் றெண்ணி'
அஞ்சிக்கிடந்த தனி மனிதனை
ஆண்மை கொள்ள வைத்து
ஓராளென ஆக்கினுய் நீ அன்று.
ஓர் ஆளென உயர்ந்தவன்
மீண்டும் அலி ஆனதுபோல்

ஒன்றுக்கு அன்று அடிமை என்றால்
இன்று பத்துக்கு அடிமையாக
எதிர்ப்பு சக்தி இழந்து
வெள்ளை ஆட்சியே மேலோ என
உள்ளுக்குள் கேள்வி கேட்கும் நிலை

கொடிதாங்கும் கோஷ்டிகள்
எதிர் எதிர் கோஷங்களுடன்
கடமை விட்டுக் கட்டுப்பாடின்றி
ஊர்வலம் போகையில்
ஊர்க்களேபரம் விளைவிப்பதைக் கண்டு
செயலிழந்து புரியாத நிலை
தினசரி நடைமுறையே பாதிப்பு

அகிம்சை மறந்தாச்சு
ஆளை கல்லால் அடிக்கலாச்சு
வாய்மை மறைந்து போச்சு
வாக்குறுதி புறக்கணிக்கலாச்சு
சகோதரத்வம் அறுந்துபோச்சு
கோஷ்டியாய் அடித்துக்கலாச்சு
மனிதாபிமானம் விட்டுப்போச்சு
தன் அபிமானம் பெரிசாப் போச்சு
பணிவை உதறியாச்சு
அதட்டிப் பேசலாச்சு
மரியாதை விட்டாச்சு
மதிக்காமை எகிறிபோச்சு
கண்ணியம் மறந்து போச்சு
கன்னா பின்னாவென பேசலாச்சு
கட்டுப்பாடு தளர்ந்து போச்சு
காட்டுத் தனமாய் நடக்கலாச்சு
கடமை மறக்கலாச்சு
பாதிவேலையின் போகலாச்சு

இத்தனைக்கும் உதாரணங்கள்
லட்சோபலட்சம் காட்ட முடியும்,
ஒன்று போதும் இத்தனைக்கும்.
சிப்பந்திகள் குடியிருப்பை முற்றுகையிட்டு
குடிநீர்க் குழாயை ஒடித்து
குழந்தைக்குப் பால் மறுத்து
நாள் கணக்கில் செய்த :கேரோவில்
அகிம்சை, வாய்மை கடமை, அன்பு
இரக்கம், மனிதாபிமானம், சகோதரத்வம்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
அத்தனையும் காற்றில் பறந்தாச்சு
அவை பற்றி இனிப் பேச வாயில்லை

எதுவும் மிஞ்சவில்லை
நீ பிறந்த மண்ணில்
நீ வாழ்ந்த மண்ணில்
நீ மட்டும் என்ன
உனக்கு முன்னும்
எத்தனையோ மாமனிதர்கள்
வாழ்ந்து காட்டிய பாரதத்தில்

அன்பு உபதேசித்து
சிலுவையான ஏசுவுக்குப் பின்
ஆகும் ஆண்டுகள் சுமார் இரண்டாயிரம்
நாற்பதைம்பது தலைமுறை இருக்கும்
அவனை அடையாளம் தெரியாதிருக்க
அவன் செய்திகளையே மறந்துவிட
காலச் சூழ்நிலை, வாழ்வுச் சிக்கல்
தம் பங்கை உதவி இருக்கும்
அதேபோல்
வேதகாலம் முதல் உனக்குமுன் வரை
ஆன்ம ஒளி பெற வழி சொன்னோரை
பாரதமும் மறந்து போக
காரணம் பல பங்கு செலுத்தி இருக்கும்

ஆனாலோ
உனக்குப்பின் ஆகும் ஆண்டுகள் இருபதே,
அதே தலைமுறைதான்—
நீ இருந்த காலத்து கூடவே இருந்து
உன்னைத் தன் கண்ணுள் வாங்கி
உன் பேச்சை தன் காதுகளில் தாங்கி
உன் எழுத்துக்களைத் தன் வாயால் உச்சரித்த
அதே தலைமுறைதான்
இன்னும் வாழ்கிறது இங்கு
அடுத்த இளம் தலைமுறைதான்
வளர்ந்து வருகிறது இங்கு
அதுக்குள்ளே
உன் சித்திரம் மங்கலாச்சு
உன் குரல் கனவுக் குரலாச்சு
உன் சொல் அலமாரி நூல் ஆச்சு

நாடு வாழ இனம் உயர வேண்டும்
பண்பு உயர இலக்கிய அறிவுநூல் பெருக
வேண்டும்

இலக்கிய அறிவு நூல் பெருக
மொழி வளர வேண்டும்
மொழி வளர தக்க வாய்ப்பு வேண்டும்-என
மொழி ஆசைப்படுவதில் தவறில்லை-ஆனால்
மொழி கொண்டு இனம் பிரித்து
தன் மொழிப் பெருமை பேசி
பிற மொழி துவேஷம் வளர்த்து
மொழிப் போர் அளவுக்கு வந்து
மொழிக்காக ஐக்யம் அழிவதென்றால்!

தொன்று தொட்டு பல மொழி இருந்தும்
பல கலாசாரம் பெருகியும்
பல மதங்களுக்கு இடம் கொடுத்தும்
பல பிற மண்காரர்கள் வந்து
சாம்ராஜ்யக் கொடிகள் நாட்டியும்
ஐம்பத்தாறு தேச மன்னர்கள்
ஓயாது தம்முள் போராடியும்
நானூறுக்கு மேற்பட்ட
சமஸ்தானாதிபதிகளும் ஜமீந்தார்களும்
தனி உரிமை சாசனம் பெற்று
நல்ல, கெட்ட அரசு நடத்தியும்
இவை எல்லாம் சமாளித்து
இன்று வரை உள்ள இந்தியாவில்
தொடர்புக்குப் பயன்படும் மொழிக்காக
மொழியே வாழ்வென மொழி வெறி கொண்டு
தன் தனக்கென சேனை தயாரித்து மோதி
மொழி எல்லைச் சுவர் எழுப்புவதென்றால்!
'ஜாதி மதங்களைப் பாரோம்'
'ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'

'சண்டை செய்தாலும் சகோதரர்'
'முப்பது கோடியும் வாழ்வோம்-வீழில்
முப்பது கோடியும் வீழ்வோம்'-என
அடிவயிற்றிலிருந்து குரல் எழுப்பி
ஞானம் வந்து கூவின நாளெல்லாம் போய்
மத ஜாதிரீதியாக உரிமை சலுகை கேட்டு
தன் ஜாதி உயர்வுக்கு வழிதேட முற்பட்டு
ஜாதி அடிப்படையில் வாக்களிப்பதும் ஆகி
ஜாதி மத வேறுபாடு வளர்த்து
துவேஷம் வளர்த்து
ஜாதிக் கலகங்கள் நடப்பதென்றால் !

அகிம்சை முதல் கட்டுப்பாடு வரை
அத்தனையையும் மேடை ஏறிச் கொட்டுவோர்
என்ன பதில் சொல்ல இருக்கு ?
அன்று நடந்தது ஒரு சௌரி சௌரா
அதுக்காக இயக்கத்தையே திருத்தினாய் நீ
இன்று சௌரி சௌராக்கள் நூற்றுக்கணக்கு
ஏவின அஸ்திரத்தை திரும்பப் பெற
தயாராக இல்லையாரும்.
மனிதம் உனக்குப் பெரிசு, முதன்மை
இயக்கம் அதுக்கு அடுத்த பட்சம் ;
இப்போது அதுக்கு நேர் எதிர்மாறு
மனிதம் மறந்த மானிடம் !

'உலை ஏற்றி விட்டு சோறுக்க மறியல்
நடுக்கிணற்றில் நிகழ்காலம்'
என்ற புதுக் கவிஞன் சரியாகச் சொன்னான்.
நடுக்கிணற்று நிகழ்காலத்துக்கா
உன் இறந்த கால சாதனைகள் ?
எதிர்காலத்துக்கு இன்னும்என்ன சோதனைகள்!
பாரதம் மட்டும் என்ன
உலகுக்கே நடுக்கிணற்று நிகழ்காலம் !

உலகத்து இனம் முழுதும் ஒன்றாக
உன் வழி பின்பற்ற முன் வந்தோரின்
ஜான். ராபர்ட் கென்னடிகள்
மார்டின் லூதர் கிங்
உதிரம் எல்லாம் பீறிட்டுப் பாய்ந்து
உலகம் சிவப்பாய் குழம்புகிறது
வெள்ளையாய் மாறும் நாள் வருமா என
மனித வர்க்கமே ஏங்குகிறது

நீ இன்றிருந்தால் தொண்ணூற்றென்பது
சதம் போடும் நாள் தொலைவில் இல்லை
ஆனால் நீ இருந்தது எழுபத்தொன்பது
சதாபிஷேகநாளும் கிட்ட இருந்தது.
ஆனால் உனக்குப் பின்
ஆண்டுகள் இருபது இன்றோடு

ஒரு வேளை
நெஞ்சுக் குறையுடன் கரைந்த நீ
மீண்டும் எம்மிடை வந்து பிறந்து
இருபதாண்டு இளைஞனாய்
சர்வோதய தத்துவம் தொடர
சத்தியம் அகிம்சை நிலைநாட்ட
சமயத்துக்கு எதிர்பார்த்து
வளர்கிறாயோ எங்களோடு ?

## புத்தகங்கள்

# பாரீசுக்குப் போ

சி. கனகசபாபதி

ஜெயகாந்தனின் 'பாரீசுக்குப்போ' வில் ஒரு வசதிபடைத்த, கலையுணர்ச்சி மிகுந்த ஒரு தெலுங்குக் குடும்பத்தில் மரபையே போற்றுகிற சேஷையா என்ற ஒரு தந்தையும், தற்காலப் பாங்கைப் போற்றுகிற அவருடைய மகன் சாரங்கனும் ஒருவருக்கொருவர் முரண்பட்டு மோதிக் கொள்ளும் பாத்திரங்களாக வருகிறார்கள். ஒரு தந்தை மகன் கதைதான் முக்கியமான கதையாக வருகிறது.

அந்தத் தந்தை மரபான கர்நாடக சங்கீதத்தில் புலி; வியாபாரப் புலியும் கூட, அவருடைய பெரிய பங்களா வீடு சென்னை எழும்பூரிலுள்ள மேம்பாலத்தைக்கடந்து ஒன்றிரண்டு வீதிகளில் நேரே நடந்து சென்றால் சற்றுத் தூரத்தில் அங்கே இருந்தது அவருடைய மூன்று புதல்வர்கள், ஒரு புதல்வி ஆகிய நால்வரில் ஒருவன் தான் சாரங்கன். அவன்தான் எல்லோரிலும் இளைய மகன்; செல்லமாக வளர்ந்தவன்.

சேஷையாதான் அந்தக்கூட்டுக் குடும்பத்தின் முழுஅதிகாரத்தையும் கைப்பற்றியிருந்தார். ஒரு கூட்டுக்குடும்பக் கதையும் 'பாரீசுக்குப்போ' வில் உண்டு என்பதை அடுத்துப் பார்ப்போம். முதலில் தந்தை—மகன் கதையைப் பார்க்கலாம்.

தந்தையின் சொல் பேச்சைக் கேட்காமல் சாரங்கன் ஒரு லட்சிய வெறியோடு பாரீசுக்குப் போய் விட்டான். அங்கே ஐரோப்பிய சங்கீதத்தைக் கற்றுக் கொண்டான். ஏற்கனவே தனக்குத்தெரிந்திருந்த கர்நாடக சங்கீதத்தோடு அதை ஒப்பிட்டு நமது இசைக்கலையின் துறையில் ஒரு தற்காலப்பாங்கைஉருவாக்க வேண்டும் என்று பாரீசிலேயே தீர்மானம் கொண்டான்.

சாரங்கன் பாரீசிலிருந்து திரும்பி வந்தபோது அவனுக்கு வீட்டில் வரவேற்பே இல்லை. அவனுடைய தந்தையே அவனை வெறுத்தார். போதாக் குறைக்கு அவன் மது அருந்தும் வழக்கத்துடன் பாரீசிலிருந்து வந்திருந்தான். சிகிரெட் குடிப்பதிலும் தன் அறையில் தூக்கத்துடன் சோம்பலில் சுகம் காண்பதிலும், லலிதா என்னும் பெண்ணுடன் சுற்றுவதிலும் பொழுதை வீணே கழித்தான். லலிதா மகாலிங்கம் என்பவரின் மனைவி; ஒரு பெண் எழுத்தாளர்: நவீன கலைகளில் சாரங்கனுக்கு இருந்த ஆர்வம் லலிதாவுக்கும் இருந்தது. மேலும் பாலுணர்ச்சியில் தடுமாறியுள்ள லலிதாவையே பாரீசுக்குப் போய் வந்த நவநாகரிக அனுபவமுள்ள சாரங்கன் தனது இளமைப் பசிக்குப் பயன்படுத்தியும் கொண்டான்.

இதெல்லாம் சாரங்கனின் தந்தை சேஷையாவுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. மேலும் அவருடைய கர்நாடக சங்கீத ஞானத்துக்குப் பரம வைரியாக வளர்ந்து விட்டான் மகன் என்றும் அவர் நினைத்து அவனிடம் தர்க்கம் செய்யும்போது திட்டிப் பேசினர். தம்முடைய மற்றொரு மகன் நரசிம்மனிடமும், மகள் வயிற்று பேரனை முரளியிடமும் வியாபாரம் தொடங்கும்படி ஒன்றுமே சொல்ல மனசில்லாமல், சின்ன மகன் சாரங்கனிடம் வேண்டிய முதல் கொப்பதாகச் சொல்லி அந்த வியாபாரத்தில் ஈடுபடும்படி வற்புறுத்தினர் சேஷையா. சாரங்கனே இசைக்கலையைப் புதுப்பிக்கும் தனது வாழ்க்கை நோக்கையே பெரிதாக மதித்து, தன் தந்தை தனக்காகவே வழிகாட்டிய, 'வியாபார நோக்கைப் புறக்கணித்து விட்டான்.

இதனல் சேஷையா சீற்றம் கொண்டு சாரங்கனுக்கு வீட்டில் நடந்த செலவுகளைக் குறைத்து வேண்டுமென்றே அவனை ஒடுக்கவும் பழிவாங்கவும் முற்பட்டார். தந்தையும் மகனும் மோதிக் கொண்ட முரண் ஜெயகாந்தனல் திறமாக உருவாக்கப் பட்டிருக்கிறது. வீட்டில் சேஷையாவின் மேலாதிக்கம் வென்றது. சாரங்கன் தந்தையை விட்டு அந்த வீட்டை விட்டு வெளியேறினன்.

இதுவரைக்கும் சாரங்கன் வாழ்வில் குடும்ப முரண் நிலை. இதுக்குப்பிறகு அதில் சமுதாய முரண் நிலை குறுக்கிட்டது.

லலிதாதான் சாரங்கனை வெளிச் சமுதாயத்துக்கு அறிமுகப்படுத்தினள். சென்னையில் ஒரு ஓவியக் கூடத்துக்கும் சினிமாப்படம் எடுக்கும் நிலையத்துக்கும் சாரங்கனை அழைத்துச் சென்றள். சினிமா சங்கீதத்துறையை ஒரு தொழிலாகக் கொள்ள வைக்கலாம் சாரங்கனை என்பது லலிதாவின் திட்டம். ஆனல் சாரங்கன் சினிமா படம் எடுக்கும் நிலையத்தில் பெரிய ஏமாற்றத்துக்குள்ளாகி வெறுத்துத் திரும்பினன்.

சாரங்கன் அதன் பிறகு மனமுறிவு கொள்ளும் நிலை அடைந்தான். ஆனல் அவன் மனமுறிவு கொண்டதாக ஜெயகாந்தன் கதையை முடிக்காமல் ஒரு நண்பரின் எதிர்பாராத உதவியால் ரவீந்திர சங்கீதத்தை அறிந்து கொள்ள வங்காளம் சென்ருன், பாரீசுக்குத்திரும்பிப்போய் விடவில்லை என்று முடித்திருக்கிருர். சாரங்கனுக்கு தமிழகத்தைப் பொருத்த வரையில் நம்பிக்கை இல்லை என்று காட்டுகிறது, பாரதம் என்ற பரந்த அளவில் நம்பிக்கை தெரிவதாக காட்டுகிறது.

ஜெயகாந்தனின் 'பாரீசுக்குப் போ'வின் கதை முடிவு கதையில் திடீரென்று தோன்றி நம்பிக்கை தரும் வகையில் பொருத்தமாக இருந்தாலும், இந்த முடிவு எப்படிப்பட்ட முரணுக்குப் பிறகு திருப்பத்திற்குப் பிறகு விளைந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சமுதாய முரண் நிலை என்பது புதிய சங்கீதத்தை உருவாக்க நினைத்த சாரங்கனுக்கு எப்படி முரண்பட்டிருந்தது, எப்படி அவனுக்கு முறிவை கொடுத்துவிடும் போலிருந்தது என்றெல்லாம் ஜெயகாந்தன் விளக்கத் தவறி விட்டார். அதாவது ஜெயகாந்தன் தந்தையும் மகனும் மோதிக் கொண்ட குடும்ப முரண் நிலையில் தனி ஆள் மனவியலை வரைந்தது போல, சாரங்கனுக்குப் பகையாக இந்தச் சமுதாய முரண் நிலை எப்படி வலுக்கொண்டு அவனுக்கு எதிரே நின்றது என்று சமுதாய மனவியலைச் சித்தரிக்க எடுத்துக் கொள்ளவில்லை. அந்தச் சினிமாப் படம் எடுக்கும் நிலையத்திலிருந்து யாரையேனும் ஜெயகாந்தன் நமக்கு உருவாக்கிக்காட்டவில்லை அல்லது அங்கே சினிமா சங்கீதத் துறையில் சாரங்கனுக்குப் பிடிக்காத அபத்தங்கள் என்ன என்றும், திரைப் பாடல்களின் இன்றைய போக்கு சாரங்கனுக்குப் பிடித்தமான நவீனத்துவமானது அல்ல என்றும் ஜெயகாந்தன் வாசகர் மனங்களில் பதியும்படி வரையவில்லை,

சாரங்கன் வாழ்வில் குடும்ப முரண், சமுதாய முரண் என்ற இரண்டு முரண்களும் குறுக்கிட்டன என்று தாமே கதையினூடே சொல்லிக் கொள்ளுகிற ஜெயகாந்தன் அந்த முரண்களின் திருப்பங்களுடன் முடிவைக் கொடுக்காதது பெரிய குறைபாடு.

இப்படியாக ஒரு தந்தை—மகன் கதை 'பாரீசுக்குப்போ'வில் மையாக நடைபெறுகிறது இவ்வளவு வரைக்கும் குடும்ப முரணை தோன்றி முடியும் மட்டும் ஜெயகாந்தன் ஒரு சிறுகதையாக ஒரு தந்தை—மகன் கதையை எழுதியிருந்தால் அது ஒரு உருவத்தில் ஒருமையோடு நிறைவேறியிருக்கும்.

ஆனல் ஜெயகாந்தன் இந்தத் தந்தை—மகன் கதையோடு ஒரு கூட்டுக் குடும்பக் கதையையும் ஒட்டிச் சேர்த்திருக்கிருர். அந்தத் தாத்தையாவின் மூத்த மகன் ரங்கையா வைசூரி கண்டு இறந்து விட்டான். ரங்கையாவின் மனைவி லட்சுமி தன் ஒரே குழந்தை கண்ணனுடன் அந்தப் பங்களா வீட்டில் இருந்தாள். ரங்கையாவின் சாவுச் செய்தியைப் பாரீசிலிருந்த சாரங்கனுக்குத் தாத்தையா அனுப்பவில்லை. காரணம் கேபிள் கிடைக்கவில்லை என்று பிறகு சொல்லிக் கொண்டார்.

சேஷையாவின் இன்னெருமகன் நரசிம்மன் திருமணம் ஆனதும் தன் மனைவியுடன் மாமனர் வீடே கதி என்று போனவன் அப்புறம் திரும்பவும் சொந்த வீட்டுக்கு வந்து தந்தையின் அன்பையும் ஆதரவையும் இழந்து விட்டான். சேஷையாவின் தங்கை பாலம்மாள் நரசய்யா என்பவருக்கு வாழ்க்கைப்பட்டு ஆனல் கணவனுடன் வாழ்க்கைப்பட்டு ஆனல் கணவனுடன் வாழக் கொடுத்து வைக்காதவளாகத் தந்தையின் பராமரிப்பில் அங்குதான் இருந்தாள். பாலம்மாளின் மகன் முரளி திருமணமாகித் தன் மனைவி லீலாவுடன் தாத்தையா வீட்டிலேயே வாழ்ந்து வந்தான். பாலம்மாளின் கணவர்

நரசய்யா தமது கலைரசனையின் காரணத்தால் கங்கா என்னும் தாசியுடன் வேறொரு ஊரில் வாழ்ந்து வாந்தார். ஆனால் நரசய்யா பாலம் மாளைத் தாம் வெறுக்கவில்லை என்றும், பாலம் மாளே நரசய்யாவைப் புறக்கணித்து நரசய்யா வின் வாழ்க்கையையும் தன்னையும் அழித்துக் கொண்டாள் என்றும் ஜெயகாந்தன் சொல்லி யிருக்கிறார்.

இவ்வளது தூரம் சூழ்நிலை கெட்ட ஒரு கூட்டுக் குடும்பமே சேஷையாவின் குடும்பம் இதில் அவர் வீட்டில் இருக்கும் மகன் நரசிம மனை நம்பாமல், மகள் வயிற்றுப் பேரன் முரளி யிடம் வியாபாரம் பண்ணச் சொல்லாமல், பாரீசிலிருந்து திரும்பவந்த சாரங்கனிடமே நம் பிக்கை வைத்தார். இதனால் தாத்தா—பேரன் மோதலும், அண்ணன்—தங்கை மோதலும் நடக்கத் தொடங்கின.

இப்படிப்பட்ட கூட்டுக் குடும்பக் கதை அங்கங்கே கதைத் தலைவனை சாரங்கனைச் சுற்றி நிகழாமல், எங்கெங்கோ சுற்றி நிகழ் கின்றன. சாரங்கனைப் பாதிக்காத அளவிலும் கூட்டுக் குடும்ப நிகழ்ச்சிகள் வருகின்றன. உதாரணத்துக்கு, தாசி கங்காவுடன் வாழ்ந்து வந்த நரசய்யா வெண்ணிறத் தாடியுடன் பாலம் மாளிடம் கொண்ட காதலுள்ளத்துடன் ரவீந் திரரைப் போலத் தோன்றி ஒரு தத்துவ உரை நிகழ்த்தும் இடம் சொல்லலாம். ஒரு கூட்டுக் குடும்பச் சூழ்நிலை என்றால், அங்கே ஒரு வழி தவறிய புதல்வன், அவன் நாடிய ஒரு தாசி, ஒரு அதிகாரம் படைத்த குடும்பத் தலைவர், ஒரு விதவை, பாசத்துக்கு ஒரு சின்னஞ் சிறு குழந்தை என்றெல்லாம் வரவேண்டும் போலிருக்கிறது! 'பாரீசுக்குப்போ'வில் ஒரு கூட்டுக் குடும்பக் கதை முக்கியமான ஒரு தந்தை-மகன் கதைபோலத் தனித்து நிற்கிறது.

'பாரீசுக்குப்போ'வில் மூன்றாவது கதை தான் லலிதாவின் கதை, லலிதாவின் சிறு பிராயம் முதல் மகாலிங்கத்தை மணம் புரிந்து கொண்டு வாழ்வது வரை, அதன்மேல் சாரங் கனைக் கண்டு தான் முதன் முதலாக அப்போது தான் காதலிப்பதாக எண்ணுவது முடிய, லலிதா என்னும் ஒரு பெண் எழுத்தாளர் கதை உருவா கிறது. ஆனால் இந்தக் கதையில் லலிதா என்ற பெண் பாத்திரம் தனக்குத்தானே முரண்பாடு கொண்டவளாக இருக்கிறாள். மகாலிங்கத்தைத் தெய்வமாக மதிக்கிறாள்; அதே சமயம் சாரங் கனிடம் தகாத காதல் உறவு கொள்கிறாள். லலிதா செயற்கையாக ஒட்டி வைத்த கதைப் பாத்திரமாக இருக்கிறாள். லலிதாவின் செயற் கைத் தன்மையைத் தாமே தெரியவந்த ஜெய காந்தன் டால்ஸ்டாயின் அன்னாவுடன் அவளை ஒப்பாகக் கட்டுரைத்து எழுதியிருக்கிறார். கதை சொல்லலில் கட்டுரைத்தலுக்கு என்ன வேலை என்று தெரியவில்லை. லலிதாவின் கதை சாரங் கனுடன் ஒட்டியது; ஆனால் லலிதாவின் செயற் கைத் தன்மையால் ஒட்டாமல் பிரிந்தும் செல்லு கிறது.

'பாரீசுக்குப்போ'வில் நாலாவது கதைதான் நரசய்யா பாலம்மாளின் கதை. இதில் நரசய்யா வையும் பாலம்மாளையும் சுற்றிச் சூழ்ந்து கதைத் தலைவனை சாரங்கனின் மனம் அவ்வளவாக ஈடுபடுவதாகத் தெரியவில்லை. நரசய்யா— பாலம்மாள் உலகம் தனி உலகமாக இருக்கிறது அதனோடு சாரங்கனின் வாழ்க்கைப் பயணம் ஒட்டவில்லை. உண்மையில் தாசியின் மோகத் தில் மனைவியை வாழ முடியாதவள் ஆக்கிய நரசய்யாவின் கதை ஒரு தனிக்கதைதான். அதுக்கென்று ஒரு தனித் தீர்ப்பை ஜெயகாந்தன் நரசய்யாவால் பேசவைத்திருக்கிறார்.

இப்படியாக ஜெயகாந்தனின் 'பாரீசுக்குப் போ'வில் நாலு சிறு கதைகளின் கருக்கள் தனித் தனியே ஒட்டிவைக்க முயலப்பட்டு ஆனால் பொருத்தமான ஒட்டு முடியாமல் போயிருக் கின்றன. நாலு சிறுகதைகளின் கதம்ப மான 'பாரீசுக்குப்போ' ஒரு நாவல் உருவம் அடையவில்லை. இதுதான் என் மதிப்பீடு.

ஒரு சிறுகதை எழுத்தாளர் நாவல் எழுத முற்படுகிறபோது தாம் கற்பனை செய்து வைத் துள்ள சிறு கதைகளைப் பின்னிவைத்து விட் டால், அது நாவலாக உருப்பெற்று விடாது. நாவலுக்கு ஒரு தனிப்பட்ட கதைப் பின்னல் உணடு.

வாசகர்களில் ஒரு சிலர், அங்கங்கே பாத் திரங்களின் பேச்சுக்களும் கருத்துக்களும் விவா தங்களும் பின்னப்பட்ட நாவல் 'பாரீசுக்குப் போ' என்று கருதலாம். நவீன கலைகளில் நவீன ஓவியம், நவீன இசை, நவீன சிற்பம் ஆகிய வற்றைத் தாமே பாராட்டிப் பேசுகிறது போல வே பாத்திரப் பேச்சுக்களில் அமைத்திருக்கிறார் ஜெயகாந்தன். ஆனால் நவீன விமரிசனக் கலையின்மீது மட்டும் ஏனோ ஜெயகாந்தன் எரிச்சல் காட்டியிருக்கிறார். மேலும் ஓரிடத்தில் பழைமையான கலையின் அமைப்பு நவீனத்துவ மான கலையின் அமைப்பில் மரபுத் தொடர்ச்சி யாகக் காணப்படுகிறது என்று 'பாரீசுக்குப்பேசி வில் ஜெயகாந்தன் சொல்லியிருக்கிறார். ஆனால் இதே ஜெயகாந்தன் 'தீபம்' பேட்டியில் பிச்ச மூர்த்தி போன்றோரின் புதுக் கவிதையை இந்தப் பார்வையில் ஏனோ பார்க்க விருப்பப்பட வில்லை. இப்படியெல்லாம் பார்க்கிறபோது, கருத்துக்களால் பின்னப்பட்ட நாவல் 'பாரீசுக் குப்போ' என்று வாசகர்களில் ஒரு சிலர் சொன் னாலும் இதன் மதிப்பீடு உயராது.

நாலு சிறு கதைகளின் கதம்பமான 'பாரீசுக் குப்போ' ஒரு நாவல் உருவம் அடையவில்லை என்பதே என் வாசக மதிப்பீடு.

# கனியானுள்

எஸ். கிருஷ்ணமூர்த்தி

கனி பறிக்கப் போன கன்னி
தானே கனியாகி
கனிந்தே கசங்க
அவன்
சுவைத்துச் சோர்ந்து அலுத்து
மெல்ல முடியாமல்
கொட்டை துப்ப
துப்பிய கொட்டை முளைத்தது.
பக்குவமான பச்சை மண்
கிளர்ந்தது, வளர்ந்தது
வளர்ந்தது, கிளர்ந்தது
இலை, பூ, பிஞ்சு, காய், கனி
கனி பறிக்கப் போன கன்னி
தானே கனியாகி
கனிந்தே கசங்க
மீண்டும்......மீண்டும்......

# தலைவியே

துரை. சீனிசாமி

சோலை எங்கும் பூக்கள்
முல்லை
மல்லிகை
செவந்தி ரோஜா
இளவேனிற் காலமாய்
நீ வந்து சேர்ந்தாய்,

பூக்கள் மணப்பன

சிதறித் திரியும் ஆடுகளை
திரட்டி ஓட்டுகிருன்
இடையன் பட்டிக்கு

அலைந்து குலையுமென் உணர்வுகளை
இழுத்து அடைக்கிருய்
உன் மனக்கூட்டில்.

உணர்வுகள் உய்த்தன

# கிளி

ம. ந. ராமசாமி

பருவப்பெண் முகப்பொலிவு
சொல்லும் எழில் மொழிகள்.
ஊமையரான தம் மக்கள் கொஞ்சல்,
மரத்தடி ஜோதிடனுக்கு
உணவளிக்கும் வரப்பிரசாதி,
பூனைக்காகும் விருந்து
ஓவியனின் இருவண்ணச் செலவு
கவிஞனுக்குக் கிட்டிய உறவு
கிள்ளி முகரும் ரசிகனின்
கூண்டுப் பார்வை,
பதுமை சொன்ன கதையில்
விக்கிரம ஆதித்தன் கூடு.
ஜவுளிக்கடை சேலை நிற வண்ணம்,
இசைத்தட்டு, திரைப்படம்
வானொலிப் பெட்டி
இவையின் முன்னோடி

# படைப்பு

ந. ஜோதிராமலிங்கம்

பேனா மூடியை திறக்க
எச்சில் ஊற்று மை ஒழுக
கற்பனைக்குதிரை கால் ஒடிந்து
பட்ட மரமாய் முறிந்த பாகாய்
என்னுள் இறந்தது.

எழுத்து என்ருல் எளிதாய் நினைத்து
சுழித்து வரும் கற்பனை ஓடை
சுகமாய் நீந்தலாம் என நினைத்தேன்

வாங்கிய நினைவு வந்த கற்பனை
தேங்கிய உணர்வு திகட்டாத முனைப்பு
வேண்டாத பொருள் என அறிந்தேன்

எச்சில் துடைக்கும் பிழைப்பே இது
எழுத்தாளன் படைப்பு இல்லை
எழுத்தாளன் பிழைப்பு

# கண்ணீர்

பூ. மாணிக்கவாசகம்

கவலைக் கருவ மரத்தை
சிந்தனைக் கோடாலியால்
வெட்டும்
மனத்தின் மேனி
சிந்தும் வேர்வைத்துளிகள்:

கண்மாய்க்குள்
விழிச் சிறுவர்
விளையாடிக் கலக்க
இமைக்கரை தாண்டி
சிதறும் திவலைகள்;

கண்வாய்க்குள்
விழிநாக்கு
சுழல
இமையிதழ்கள்
ஒழுகவிடும்
எச்சில்.

# நரை

வ. பா. சடகோபன்

காயக் காய
பாட்டன்காய் வெடித்து
பறக்கும் தும்பை வெள்ளை;
காலக் காய்ச்சலால்
கவலை வெடிக்க
பிறக்கும் நரை
பறக்காது
மறையவும் மறையாது.

# இந்த ஏட்டில்

இந்த ஆண்டு மகாத்மா காந்தியின் நூறுவது பிறந்த நாள் விழா ஆண்டு. மகாத்மா காந்தி நாம் கண்ணுல் காண வாழ்ந்த ஒரு— சூபர்மான்—மாமனிதன்; பாரதி சொன்னது போல் மனிதர்க்கெல்லாம் தலைப்படு மனிதன். விஞ்ஞான மேதை எயின்ஸ்டின், 'இப்படிப் பட்ட ஒரு மனிதன், இந்த பூலோகத்தில் நடந் தானு என்று நம்ப மறுக்கும் நாளும் வரும்' என்று கூறியதுபோல் அசாதாரண மனிதன்; அதி—மானிடன். அத்தகையவன் மறைந்து இருபது ஆண்டுகள் ஆகிவிட்டது. சரித்திரத் தில் அவனுக்கு இடம் கிடைத்து விட்டது. இப்போது அவன் வாழ்க்கை சரித்திரமும் சாதனையும் நமக்கு வரலாறு. ஆனுல் இலக் கியத்தில் ?

உலக இலக்கியங்களைப் புரட்டிப் பார்த் தால் அங்கங்கே நெப்போலியன் காலம், பிரஞ்சு புரட்சி நாட்கள், ரஷ்ய புரட்சி, ஸ்பானிய உள்நாட்டு யுத்தம் நடந்த கட்டம் சம்பந்தமாக எல்லாம் நாவல்கள், நாடகங்கள், கவிதைகள் இயற்றப் பட்டிருப்பதைக் பார்க்கி ரோம். ஆனுல் நம் தமிழ் இலக்கியத்திலோ கல்கி ஆரம்பித்து வைத்த சேர, சோழ, பாண்டிய, பல்லவ காலத்து கற்பித சூழ்நிலை யைத் தாண்டி வரவில்லை இன்னும். கிழக்கு இந்திய க்ம்பெனி நாட்களுக்குக்கூட வரவில்லை. அப்படி இருக்க காந்திகால சுதந்திரப் போராட்ட நாட்களுக்கு எப்போது வருவோம் என்று எப்படிச் சொல்ல முடியும் ? அந்தக் காலத்தை சாட்சிக்காரனுக நின்று பார்க்கும் ஒரு பார்வை, ஒதுங்கி நின்று அந்த நாட்களை மதிப் பிட்டுப் பார்க்கும் சக்தி படைப்புக்கு அதை பயன் படுத்தும் திறமை இன்னும் தமிழ் படைப் புத் துறையில் ஏற்படாததே காரணமாக இருக் கக்கூடும் என்று சொல்லத் தோன்றுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் 'நீ இன்று இருந் தால்' கவிதை இந்த ஏட்டில் வெளிவருகிறது. காந்தி காலத்தோடு ஒட்டியே வளர்ந்து வந்து அதைப்பற்றி அன்றும் இன்றும் சிந்தித்து வந் திருக்கும் என் பார்வையில் உருவாகிய இந்த குறுங்காவியத்தை உங்கள் முன் வைக்கிறேன்.

சிறந்த ரஷ்யக் கவியான மயகாவ்ஸ்கியின் (1893—1930) ஒரு சில சிறு கவிதைகளைத் தான் நான் முன்பு படித்திருக்கிறேன். 'நீ இன்று இருந்தால்' எழுதிய பிறகு அவருடைய பெரும் பாலான கவிதைகள் தொகுதியை படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது, ரஷ்ய புரட்சித் தலைவன் லெனினைப் பற்றி 2500 வரிகளில் 1924ல் அவர் இறந்து சில மாதங்களுக்குப் பிறகு எழுதி உள்ள கவிதையை படித்தேன்.

லெனினின் கதையை
நான் ஆரம்பிக்க வேண்டிய
நேரம் வந்துவிட்டது.—
ஆனுல் துக்கம்
இனிமேல் கிடையாது
என்பதல்ல
என்று ஆரம்பித்து,
சரித்திரம் தெரிய வந்த
எல்லா போர்களிலும்
தலைசிறந்த போர் இது

என்று முடியுமுன் ரஷ்யப் புரட்சி சரித்திரத் தையும் லெனினின் சாதனையையும் பிணைத்து தன் பார்வையில் எழுதி இருக்கிருர். தரத்தில் அதோடு ஒப்பிட்டுப் பார்க்க இதுக்கு தகுதி இருக்கோ என்னமோ, ஆசையில் நான் போட்டி போட்டிருப்பதை உணர்கிறேன்.

இந்த ஏட்டில் நார்வே நாட்டு பிரபல நாவ லாசிரியர் நட் ஹாம்ஸன் கதை 'வாழ்க்கையின் அழைப்பு' மொழி பெயர்த்துத் தரப்பட்டிருக் கிறது. இந்த கதையை படித்ததும் புதுமைப் பித்தன் கதை, 'விபரீத ஆசை' நினைவுக்கு வரும். ஆமாம், 'விபரீத ஆசை' இந்த கதை யின் தழுவல்தான். முப்பதுக்களில் மலேயாவில் உள்ள ஒரு பத்திரிகைக்கு 'சுக்ராச்சாரி' என்ற பெயரில் சில கதைகளை புதுமைப்பித்தன் எழுதி அனுப்பினுர். அதில் இந்த தழுவல் கதையும் ஒன்று. அன்றைக்கே எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்தக் கதையைப் படித் ததும் புதுமைப்பித்தனைப் பற்றி தவருக எண்ணிவிடக் கூடாது என்பதுக்காக இதை சொல்கிறேன். வாசகர்கள் இரண்டு கதை களையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இதுவரை கவிதை விமர்சனம் செய்து வந்திருக்குத் தமிழ் விரிவுரையாளர் சி. கனகசபாபதி ஒரு நாவலை எடுத்துக்கொண்டு ஆராய்ந்திருக்கிருர். மற்ரெரு தமிழ் விரிவுரை யாளரான எழில்முதல்வன் நாவல் பாத்திரப் படைப்பு என்ற கட்டுரையை இந்த ஏட்டில் எழுதி இருக்கிருர்.

சென்ற ஏட்டிலும் இந்த ஏட்டிலும் வெளி யாகி உள்ள கவிதைகளைப் பற்றி சில வார்த் தைகள் சொல்லி ஆகவேண்டும். அவைகளில் காணும் தற்கால தோரணையை வாசகர்கள் கவனிப்பார்கள் என்று எதிர் பார்க்கிறேன். தி. சோ. வே.யின் ''குருவி''யும் நீல பத்மனுபன் கவிதை 'பூவும் நாகமும்' இந்த ரகத்தில் சுட்டிக்காட்டத் தக்கவை. எழுத்துவில் ஏற் கெனவே புதுக்கவிதைகள் எழுதி இருக்கும் இரா. மீனுட்சியின் 'மறுபயணம்' குறிப்பிடத் தக்கது. இந்த இரண்டு ஏடுகளிலும் புதுக் கவிதை எழுதி இருக்கும் சிலபுதிய பெயர்களை காண்பீர்கள். திறமைக்கு அறிகுறிகாட்டும் தன்மையை இந்த கவிதைகளில் காணமுடி கிறது.

அடுத்த ஏடு ஜனவரியில் பொங்கலை ஒட்டி வெளிவரும்

—சி. சு. செ.

# ஒரு வேண்டுகோள்

அன்புள்ள வாசகர்களே,

எழுத்து, எழுத்து பிரசுரம், நான் மூன்றும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு பத்தாண்டுக் காலமாக செயல்பட்டு வரும் ஒரு முக்கூட்டு முயற்சி. விமர்சனத்துக்காக ஒரு பத்திரிகையையும் இலக்கியத்தரமான, மற்ற புத்தக பிரசுரங்கள் போட முன்வராத எழுத்தாளர்களது நல்ல படைப்புகளை புத்தகமாக கொண்டுவர ஒரு பிரசுரத்தையும் சேர்த்து துணிந்து ஒருவனாக நடத்தி வருவது அவ்வளவு சுலபமான காரியமாக இல்லை. எழுத்து, எழுத்து பிரசுரம் இரண்டையும் வைத்துத்தான் நான். என்னை வைத்துதான் அவை இரண்டும் தொடர்ந்து வளர திடமான இலக்கியப் பணிக்கு போதிய ஆதரவு அவசியம். வாசகர்களிடமிருந்து எதிர் பார்க்கிறேன். அதுக்கான ஒரு திட்டம் போட்டிருக்கிறேன். கீழே விவரம். வேண்டுகோளை பொருட்படுத்தி தக்க ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சி. சு. செல்லப்பா

# 12 எழுத்தும் 2 புத்தகங்களும்!

ரூபாய் 15 கொடுத்து எழுத்துக்கு 1969 ஜனவரி முதல் மூன்று ஆண்டு சந்தாதாராக சேர்ந்தால் 12 காலாண்டு ஏடுகள் கிடைப்பதோடு **அன்பளிப்பாக** பின்வரும் பிரிவுகள்படி புத்தகங்கள் அன்பர்களுக்கு கிடைக்கும்.

## அன்பளிப்பாக

1. **சத்யாக்ரகி** (காந்திகால சிறுகதைகள்)
   சி. சு. செல்லப்பா — ரூ. 4-00
2. **ஆண் சிங்கம்** (சிறுகதைகள்)
   வல்லிக்கண்ணன் — ரூ. 4-00
3. **அகல்யை** (ஓரங்க நாடகங்கள்)
   கு. ப. ராஜகோபாலன் — ரூ. 4-00
4. **சில விஷயங்கள்** (கட்டுரைகள்)
   சிட்டி — ரூ. 3-00 }
   **வாடிவாசல்** (நாவல்) — ரூ. 1-00 }
   சி. சு. செல்லப்பா
5. **சில விஷயங்கள்** — ரூ. 3-00 }
   **கோடைவயல்** (கவிதைகள்) — ரூ. 1-24 }
   தி. சோ. வேணுகோபாலன்
6. **வெள்ளை** (சிறுகதைகள்)
   சி. சு. செல்லப்பா — ரூ. 3-00 }
   **வாடிவாசல்** — ரூ. 1-00 }
7. **வெள்ளை** — ரூ. 3-00 }
   **கோடைவயல்** — ரூ. 1-00 }
8. **கனவுப் பறவை** (சிறு கதைகள்)
   கர்ணன் — ரூ. 2-50 }
   **வாடிவாசல்** — ரூ. 1-00 }
9. **கனவுப் பறவை** — ரூ. 2-00 }
   **கோடை வயல்** — ரூ. 1-25 }
10. **வழித்துணை** (கவிதைகள்)
    ந. பிச்சமூர்த்தி — ரூ. 2-00 }
    **கோடை வயல்** — ரூ. 1-25 }
    **வாடிவாசல்** — ரூ. 1-00 }
11. **புதிய பாதை** (நாடகம்)
    கோமல் சாமிநாதன் — ரூ. 3-00 }
    **வாடி வாசல்** — ரூ. 1-00 }
12. **புதிய பாதை** — ரூ. 3-00 }
    **கோடைவயல்** — ரூ. 1-25 }

குறிப்பு: அன்பர்கள் தங்கள் சந்தாவை அனுப்பும்போது எந்தப் பிரிவு புத்தகங்கள் வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும் தபாலில் பெற விரும்புபவர்கள் ஒரு ரூபாய் சேர்த்து அதாவது ரூபாய் 16-00 அனுப்பவேண்டும். வி. பி. பி யிலும் அனுப்ப முடியும். பொங்கல் பரிசாக உங்கள் நண்பர்களுக்கும் பரிசுசந்தா கட்டி இலக்கிய உறவு ஏற்படுத்தித் தரவும்.

முகவரி: எழுத்து—19A, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5. Printed by A. Rajaram for Ramalakshmi Press, 97, Big Street, Madras-5.

இலக்கிய காலாண்டு ஏடு

# எழுத்து

ஜனவரி 1969

## பதினேராம் ஆண்டு

பி. ஆர். ராஜம் அய்யர்

பி. எஸ். ராமையா

ந. பிச்சமூர்த்தி

கு. ப. ராஜகோபாலன்

எஸ். ராஜலக்ஷ்மி

14

ரூ. 1-25